GOKULAM

கோகுலம்

மார்ச் 2002

ரூ.6/-




இளவரசன் எங்கே?
பக்.68



கேரளம் குறிச்சு கேட்டோ?

தவறு என்ன?



சேவல் அடைகாக்கிறது!

ஹா...ஹா...




வண்ணம் தீட்டுங்கள்!



எல்லாமே மூன்று!

பவேரியாவில் டிரினிடி திருச்சபை மூன்று அடுக்குகளுடன் கூடிய உள்ளது. மூன்று கோபுரங்கள் இக்கட்டடத்தில் மூன்று விதானங்கள் உள்ளன. மூன்று ஜன்னல்களும் ஒவ்வொன்றிலும் மூன்று கதவுகளும், உள்ளன. கட்டடத்திற்கு மூன்று பெரிய சிலுவைகளும், மூன்று சிறிய சிலுவைகளும், மூன்று மாடிப்படி வரிசைகளும், மூன்று தூண்களும், மூன்று விளக்குகளும், கன்னி மேரியின் சிலைகள் மூன்றும் இருக்கின்றன. இதைக் கட்டியது ஜார்ஜ் பீன்ட் ஜோபர் எனும் கட்டடக் கலைஞர். அவரது குடும்பத்தில் அவர் மூன்றாவது சிற்பியாவார். இத் திருச்சபையைக் கட்டி முடிக்க 33 மாதம் 33 வாரம் ஆயின.

- ஜி.கே.எஸ். பரிமளா மூர்த்தி,
கோபிசெட்டிப்பாளையம்.



கோகுலம்

மலர் : 20 இதழ் : 2 மார்ச் 2002

கதைகள் :

படக்கதைகள் :

அறிவியல் :

பாடல் :

வாசகர்களின் படைப்புகள் :

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.





கந்தன் ஒரு ஏழை நெசவாளி. கிராமத்தில் தன் வீட்டில் துணிகளை நெய்து நகரத்தில் கொண்டு விற்று வருவான். மாதம் இருமுறை துணிகளை விற்பதற்காக நகரத்திற்குச் செல்வான். சில சமயம் அனைத்து துணிகளும் விற்பனையாகி விடும். சில சமயம் கைக்குட்டை கூட விற்பனையாகாமல் அப்படியே திரும்பி வருவதுண்டு. கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையில் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும். எனவே சாப்பாட்டுக் கூடையுடன் காலையிலேயே கந்தன் கிளம்பி விடுவான்.

அன்றும் வழக்கம்போல துணிமூட்டையுடன் கிளம்பினான். நீண்ட தூரம் நடந்ததால் கால்கள் வலித்தன. களைப்பும், பசியும் ஏற்பட ஒரு மரத்தின் கீழ் மூட்டைகளை வைத்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான். சாப்பிட்டு முடித்தபின் சிறிது ஓய்வெடுத்தான். கிளம்பும் பொழுதுதான். அந்த மரத்தின் கீழே ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான்.

"சிவபெருமானே, நான் படும் கஷ்டம் நீ அறியாததல்ல! இந்த ஏழைமேல் இரக்கம் கொண்டு இன்று எல்லா துணியும் விற்றுப் போக அருள்

சாம்பிராணி

புரிய வேண்டும்" என்று வேண்டினான்.

அன்று துணி அனைத்தும் விற்றுப் போய்விட மகிழ்ந்தான் கந்தன். கடவுளுக்கு நன்றி செலுத்த மலர் மாலை வாங்கிக் கொண்டான். திரும்பும் வழியில் அதை லிங்கத்திற்கு அணிவித்து வணங்கினான். அதிலிருந்து நகரத்திற்குச் செல்லும் பொழுதெல்லாம் சிவலிங்கத்தை அவன் வணங்கிச் செல்வதும், துணிகள் அனைத்தும் விற்றுப் போவதும், மலர் மாலை வாங்கி சிவனுக்கு அணிவிப்பதும் வழக்கமாயிற்று!

நகரத்தில் ஒரு துணிக்கடை துவங்கினான். அவன் கிராமத்து நெசவாளர்கள் துணிகள் அனைத்தையும் வாங்கி, தன் கடையில் விற்றான். வியாபாரம் பெருகி ஒரே வருடத்தில் பணக்காரன் ஆகிவிட்டான்.

பரம ஏழையாய் இருந்த தன்மேல் கருணை கொண்டு அருள் புரிந்து பொருளை அள்ளிக் கொடுத்த சிவனுக்கு ஏதாவது செய்ய அவன் மனம் விரும்பியது.

லிங்கத்தின் அருகிலிருந்த மரங்களை எல்லாம் வெட்டிவிட்டு, அழகிய சிறிய கோவில் ஒன்றைக் கட்டி லிங்கத்தை அதில் வைத்து குடமுழுக்கு செய்வித்தான்.

இரண்டு நாட்கள் முடிந்திருக்கும். கந்தன் முன் சிவன் தோன்றினார். அவர் கண்களில் கண்ணீர். அதைப் பார்த்துப் பதறினான் கந்தன்.

"சுவாமி! என்ன பிழை செய்தேன்?"

"மரம் செடி கொடிகளுக்கு இடையே மலர்களின் மணத்தை நுகர்ந்து கொண்டு மகிழ்ச்சியாக இருந்த என்னை, கற்களால் சிறிய கோவில் கட்டி அடைத்து விட்டாயே. எந்த மணமும் இல்லாத இந்த அறைக்குள் எனக்கு இருக்கவே பிடிக்க வில்லை. உடனடியாக இனிய மணம் பரப்ப ஏற்பாடு செய்."

திடுக்கிட்டு விழித்து எழுந்த கந்தன் யோசனை செய்தான். மறுநாள் பெரியோர்கள் சிலரைக் கேட்டான். அனைவரும் சாம்பிராணி புகையைப் போடும்படி சொன்னார்கள். அது வரை சாம்பிராணி வீடுகளில் மட்டுமே குழந்தைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. கந்தன் சிவபெருமானுக்குச் சாம்பிராணிப் புகையைக் காட்ட ஆரம்பித்த நாளிலிருந்து கோவில்களில் சாம்பிராணி காட்டப் பட்டு வருகிறது.

— எஸ். சௌம்யாயனி
எட்டாம் வகுப்பு, புனித
அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.







நம் நாட்டில் பல மாநிலங்கள். ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித் தனி கலாசாரம், மொழி, பழக்க வழக்கங்கள். 'கடவுளின் தேசம்' என்று அழைக்கப்படும் நம் அண்டை மாநிலமான கேரளாவைப் பற்றி தெரிந்து கொள்ள நிரஞ்சனா–நித்தின் குடும்பத்தைச் சந்திக்கலாமா?

நிரஞ்சனாவும் அவள் தம்பி நித்தினும் மலையாளம் கலந்த தமிழில் வரவேற்கின்றனர். வீட்டுக்குள் நுழைந்ததும் அது ஒரு மலையாளியின் வீடு என்பதை உணர்த்தும் விதமாக கேரள மண்ணுக்கே உரித்தான பலவித கலைப் பொருட்கள் காட்சியளிக்கின்றன.

"நாங்கள் தமிழ் நாட்டில் செட்டில் ஆகிவிட்டாலும் கேரளாவில் இருப்பது போன்ற உணர்வு வருவதற்காக வீட்டைச் சுற்றிலும் மரம், செடி கொடிகளை வளர்க்கிறோம். கேரளா முழுவதும் பச்சைப் பசேல் என்று இயற்கை எழில்

கடவுளின் தேசம்!



நிறைந்து காணப் படும்'' என்கிறார் நித்தினின் அப்பா.

நேந்திரம் சிப்ஸ், நேந்திரம் பழம், டீயோடு வந்த நித்தினின் அம்மா ''இந்த ஸ்நாக்ஸ் எல்லாம் எங்கள் ஊர் ஸ்பெஷல்'' என்றார்.

''இதுமட்டுமா? பலா பழம், பலா சிப்ஸ், மரவள்ளி கிழங்கு, கிழங்கு சிப்ஸ், வெல்லம் போட்ட அப்பம் கூட எங்கள் ஸ்பெஷல்தான்'' என்றாள் நிரஞ்சனா.

''இட்லி, தோசை, சாம்பார் தமிழ் நாட்டைப் போல் தான் செய்வோம். மற்ற சமையல்களில் தேங்காய் அதிகம் சேர்த்துக் கொள்வோம். கேரளாவில் தென்னை மரம் அதிகம். தேங்காய் எண்ணெய், தேங்காய் நாரிலிருந்து செய்யப்படும் கலைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. கடலை ஒட்டிய மாநிலம் என்பதால் மீன் ஒரு முக்கிய உணவு'' என்றார் நித்தினின் அம்மா.

அப்போது கையில் இரண்டு 'கதகளி' பொம்மையுடன் ஓடி வந்த



நித்தின், ''கதகளி டான்ஸ் ரொம்ப பிரபலம். லீவுக்குப் போகும் போது நிறைய பார்த்திருக்கேன். முகத்துல பல வண்ணத்துல வரைஞ்சிருப் பாங்க. என்னை மாதிரி சின்னப் பசங்களுக்குக் கொஞ்சம் பயமாகக் கூட இருக்கும்" என்றான்.

"எனக்குப் பிடிச்சது மோகினி ஆட் டம்தான்" என்று இடைமறித்தாள் நிரஞ் சனா.

"இது தவிர கிருஷ்ணாட்டம், திருவா திரைக்களி, கோல்களி, ஒப்பனா, காக் காரிஷி நாடகம், சவுட்டிநாடகம், கூடியாட்டம் துள்ளல் போன்ற நடனங்களும் உண்டு" _ நித்தின் அப்பா.

"கேரள தண்ணீருக்கும், மண்ணுக்கும் எந்தப் பயிரும் நன்றாக விளையும். மிளகு, மசாலா பொருட்கள், பலா, வாழை, தென்னை என பலவும் செழித்து வளரும். அதே போல் பெண்களின் முடியும் நீளமாக வளரும். நீண்ட முடியின் கீழ் சிறு கொண்டையும் நெற்றியில் சந்த னமும் இருந்தால் அவர் கேரளத் தைச் சேர்ந்தவர் என்று கண்டு பிடித்து விடலாம்"— அம்மா.


"எங்கள் ஊர்ல சுற்றிப் பார்க்க நிறைய இடங்கள் இருக்குது. ஒவ்வொரு லீவுக்கும் ஒவ்வொரு இடம் போவோம். போன வருஷம் படகு வீட்டில் தங்கினோம். தண்ணீருக்குள் மிதந்தபடி வீடு இருந்தால் எப்படி இருக்கும்! ரொம்ப நல்லா இருந்தது. செலவு தான் அதிகம்னு அப்பா சொன் னாங்க" என்றாள் நிரஞ்சனா.






''ஆற்றுக் கழிமுகம் அருவி, மலை, கோயில்கள், கடற்கரை என கேரளா முழு வதும் பார்க்க வேண்டிய இடங்கள்தான். கோயில் களில் சபரிமலை, குருவாயூர், திருச்சூர் போன்றவை எல் லோராலும் அறியப்பட்ட இடங்கள். திருச்சூரில் ஆண் டுக்கு ஒரு முறை நடை பெறும் திருவிழாவில் (திருச்சூர் பூரம்) நூற்றுக் கணக்கான யானைகள் அலங்காரத்துடன் அணி வகுப்பது கண்கொள்ளா காட்சியாகும். யானை என்றதும் தான் நினைவுக்கு வருது. கேர ளாவில் நிறைய வன விலங்கு சரணாலயங் கள் உண்டு" என்றார் நித்தினின் அப்பா.


''பண்டி கைன்னு எடுத் துக்கிட்டால் இந் துக்களுக்கு ஓணம்





தான் ஸ்பெஷல். இங்கு தீபாவளி மாதிரி விசேஷமாகக் கொண்டாடுவோம். புதுத்துணி எடுத்து, ஸ்வீட்ஸ், பாயசம் செய்து உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்துக் கொண்டாடுவோம். பல வண்ண மலர்களால் கோலம் போடுவோம். விஷுவும் விசேஷமான பண்டிகை தான். பொதுவாக பண்டிகை நாட்களில் ஆண்கள் வேட்டி, துண்டும், பெண்கள் சந்தன நிறத்தில் முண்டு கட்டிக் கொள்வதும் வழக்கம். முஸ்லிம்களுக்குச் சந்தனக்குடம் என்ற பண்டிகை முக்கியமானது. கிறிஸ்தவர்களுக்கு கிருஸ்மஸ்"– அம்மா.

"அப்பா, நம்ம வீட்டில் இருக்கும் மூலிகை மருந்தைப் பற்றிச் சொல்லலையே" என்றாள் நிரஞ்சனா.



"ஆமாம். எங்களுக்கு இயற்கை மருத்துவம், ஆயுர்வேத மருத்துவத்தில் நம்பிக்கை அதிகம். கேரளாவில் மூலிகை தாவரங்கள் கொட்டிக் கிடக்கின்றன. வெளி மாநிலத்தவரும், வெளி நாட்டவரும் இந்த மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இன்னொரு முக்கிய அம்சம் கல்வி தரத்தில் இந்தியாவில் முன்னிலை வகிக்கும் மாநிலம் கேரளாதான்" என்று நிறுத்தினார் நித்தின் அப்பா.

"இங்கே சிலம்பாட்டம், மஞ்சு விரட்டு போல் கேரளாவில் களரி, வர்மக்கலை மிகவும் பிரபலமான வீர விளையாட்டுகள். ஆண்டு தோறும் நடைபெறும் படகுப் போட்டி உலகப் பிரசித்தம். படகுப் போட்டியின் போது வெளிநாட்டவர்களும் இந்தியாவின் பல மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் குழுமி விடுகிறார்கள். இந்தியச் சுற்றுலா தலங்களில் கேரளா தற்போது மிகச் சிறந்த இடத்தை அடைந்து விட்டது" என்றார் நித்தின் அம்மா.

"இவ்வளவு சிறப்பு வாய்ந்த கேரளாவை தெய்வத்தின் நாடுன்னு சொல்றது சரிதானே" என்று நிரஞ்சனாவும் நித்தினும் ஒரே குரலில் மகிழ்ச்சியாகக் கேட்கிறார்கள். நீங்களே சொல்லுங்கள்!




அட்டையில் : நிரஞ்சனா, நித்தின்

வண்ணப்படம் : ஸ்ரீஹரி

சிரிப்பே மருந்து!

ஜோக்ஸ் அனுப்புங்கள். பரிசுகளை வெல்லுங்கள்!

ரூ.100/-



- ஆர். பிரசன்னா, கரூர்.

ரூ.50/-

ராஜா : என்னது உன்னுடைய அப்பா சரியான பயந்தாங்கொள்ளியா, எப்படி?

ரவி : ஆமாம், ஒவ்வொரு முறையும் ரோட்டைக் கடக்கும்போது என் கையை கெட்டியா பிடிச்சுக்கிறாரே!

- தீ. கார்த்திக் ஸ்ரீனிவாசன், அரக்கோணம்.



ரூ.25/-

"வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி பணத்தைச் சேர்த்து வச்சேன்."

"அப்புறம் என்ன?"

"திருடன் கையைக்கட்டி, காலைக்கட்டி திருடிட்டுப் போய்ட்டான்."

- எம். வினோத், விருத்தாசலம்



ரூ.15/-

''நான் எதையாவது செய்தாலும் ஆசிரியர் அடிக்கிறார். செய்யா விட்டாலும் அடிக்கிறார்...''

''அப்படி நீ என்ன செய்தாய், என்ன செய்யவில்லை?''

''குறும்பு செய்தேன், ஹோம் வொர்க் செய்யவில்லை.''

- க. பூங்கொடி, சித்தோடு




''நம்ம
கிராமத்துலே
விரல்விட்டு
எண்ணக்
கூடிய
பட்டதாரிகள்லே
அவரும்
ஒருத்தர்!''




ரூ.15/-


''பட்டதாரின்னு
சொல்றே. ஏன்
விரல் விட்டு
எண்ணுறாரு?
கணக்குலே
'வீக்'கா?''

- தஞ்சை தாமு




உளுந்து வடை
முத்தப்பன் மிகவும் சோம்பேறி. எந்த வேலையும் செய்யமாட் டான். ஒரு நாள் -
சோமா, ஒரு வடை கொடு.
ஒரு ரூபாய் கொடு
காசு இல்லை. அடுத்த வாரம் தரேன்.
அடுத்த வாரம் வந்து வடை வாங்கிக்க.
அடப்பாவி! ஒரு வடை கடன் தர மாட்டேங்கிறானே. வடையைப் பார்த்ததும் நாவில் நீர் வடியுதே என்ன பண்ணலாம்?
டேய் முனியா, இந்த உளுந்தை யும் எண்ணெ யையும் உள்ளே எடுத்துட்டுப் போ.
முனியன் வர தாமதமானது -
இதுதான் சமயம், யாரும் கவ னிக்கலை. உளுந்தை யும் எண்ணெயையும் எடுத்துட்டு ஓடிடலாம்.
முத்தப்பன் வீட்டில் -
பொன்னி, இந்த உளுந்தையும் எண்ணெயையும் வைத்து வடை சுடு. 100 வடை வரும்.
எப்படிங்க கிடைத்தது இதெல்லாம்?
கதை : ஏ.ஆர்.ஆர்.சுரேஷ்
படம் : மகேஸ்


காலையிலிருந்து வேலை செய்து, அந்தப் பணத்தில் வாங்கிட்டு வந்தேன். நான் குளிச்சிட்டு வரேன், வடை சுட்டு வை.
சரிங்க.
குளித்துவிட்டு வந்தான் முத்தப்பன்
பொன்னி, வடை எடுத்துட்டு வா.
இந்தாங்க.
என்ன ஒரு வடை தான் வைக்கிறே? மீதி 99 வடை எங்கே?
உப்பு சரியா இருக்கான்னு பார்த்தேங்க.
அடிப்பாவி! இவ்வளவையும் எப்படி சாப்பிட்டே?
இப்படி தாங்க.
இருந்த ஒரு வடையையும் தின்னுட்டியே. உழைக்காமல் கிடைத்தது ஒட்டாதுன்னு சொல்றது சரிதான்.
இப்பொழுதாவது புரிந்தால் சரி.



முதல் பரிசு

தி. ஆர்த்தி,
ஏழாம் வகுப்பு, ஜேஸீஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிவன்மலை, காங்கேயம்.


ஓவியப் போட்டி முடிவுகள்!

பிப்ரவரி இதழில் 'குதிரை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். பந்தயத்தில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்ற பரிகள் இங்கே...



இரண்டாம் பரிசு

கே. புவனேஷ்,
ஏழாம் வகுப்பு, பாஸ்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நந்தனம், சென்னை





மூன்றாம் பரிசு

உ.சாத்தப்பன்,
எட்டாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, மதுரை.

ஆறுதல் பரிசு

ஆர். அனிதா,
ஏழாம் வகுப்பு, தூய டொமினிக்ஸ் ஏ.ஜி. மேல்நிலைப் பள்ளி, சென்னை.





ஆறுதல் பரிசு

ச.அஸ்வின்குமார்,
ஆறாம் வகுப்பு, இடையர்பாளையம், கோவை.

பரிசு பெற்ற பரிகள்



முதலில் சில ஜோக்ஸ். ஒரு அழகான கிளி. அதற்கு எப்படி பேசுவது என்று பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார் அதனை வளர்ப்பவர். கொஞ்ச நாளில் சூப்பராகப் பேச ஆரம்பித்தது கிளி.

ஒருநாள் தன் நண்பரிடம் பெருமையாகக் கிளியின் பேச்சுத் திறமையைப் பற்றிச் சொன்னபோது கிளியின் பேச்சை அவரும் கேட்க விரும்பினார்.

வளர்ப்பவர் : நான் பேசுவேன்.
கிளி : நான் பேசுவேன்.
வளர்ப்பவர்: நான் சிரிப்பேன்.
கிளி: நான் சிரிப்பேன்.
வளர்ப்பவர்: நான் சாப்பிடுவேன்.
கிளி: நான் சாப்பிடுவேன்.
வளர்ப்பவர்: நான் பறப்பேன்.
கிளி: ஏய்! பொய் சொல்லறே நீ! உன்னால் பறக்க முடியாதே!

வாயடைத்துப் போனார்கள் இரண்டு பேரும்.


அதிசயக்கல்!

முட்டாள் ஜோக்ஸ் நிறையப் படித்திருப்பீர்கள். அந்த ரகத்தில் இதுவும் ஒன்று.

ராஜா ஒருவர் வெவ்வேறு குற்றங்களுக்காக ஒரு மத போதகர், ஒரு வக்கீல், ஒரு மெக்கானிக்கல் எஞ்சினியர் ஆகிய மூன்று பேரையும் தூக்கில் போடும்படி உத்தரவிட்டார்.


மூவரும் தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். முதலில் மத போதகர் தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டார். விசையை அழுத்தினார் தூக்கு மேடை ஊழியர். விசை சரியாக வேலை செய்யவில்லை. "ஓ! இறைவன் என்னைக் காப்பாற்றி விட்டார்!" என்றார் மேலே கரங்களைக் கூப்பியபடி. அவர் விடுதலை செய்யப்பட்டார்.

அடுத்து வக்கீல் தூக்குமேடையில் நிறுத்தப்பட்டார். விசையை இழுத்தார் ஊழியர். ஆனால், தூக்குக் கயிறு அறுந்துவிட்டது. வக்கீல் "என்னை ஒரு தடவைக்கு மேல், மறுபடி தூக்குமேடையில் நிறுத்த சட்டத்தில் இடமில்லை" என்று வாதிட்டார். அவரும் விடுதலை ஆனார்.



மூன்றாவதாக மெக்கானிகல் எஞ்சினியர் மேடையில் நிறுத்தப்பட்டார். விசையை அழுத்தியபோது, மறுபடி பழுதாகிவிட்டது. பட்டென்று, "கவலைப்படாதீர்கள். ஐந்து நிமிடத்தில், ரிப்பேர் செய்து விடுகிறேன். நீங்கள் என்னைத் தூக்கில் போடலாம்" என்றாரே பார்க்கலாம்!

புது வருடம் பிறந்தவுடன், தேதி எழுதுகிறபோது வருடத்தைச் சரியாக எழுதுவதில் தடுமாற்றம் ஏற்படுவது பலருக்கும் சகஜம்தானே! இதோ வருடத்தின் எண்கள் குறித்த சுவாரசியமான தகவல்களைப் பார்க்கலாமா? 6009, 1111, 1001 ஆகிய வருடங்களை உற்றுக் கவனியுங்கள். இவற்றில் என்ன சிறப்பு அம்சம் உங்கள் கவனத்தைக் கவர்கிறது?



வலையில் சிக்கியவை

என்ன கண்டுபிடித்து விட்டீர்களா?

முதல் இரண்டு எண்களே, தலைகீழாய் அடுத்த இரண்டு எண்களாக இடம் பெறுவதுதான் சிறப்பு அம்சம்! 0,1,6,8,9 ஆகிய எண்களைக் கொண்ட வருடங்கள்தான் இந்தக் குணாதிசயத்தைப் பெற்றிருக்கும். இப்போது உங்களுக்கு ஒரு டெஸ்ட்! எங்கே இதேபோல நீங்கள் இன்னொரு வருடத்தை எழுத முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம்! விடை இந்தப் பகுதியின் இறுதியில்....

'வாய்ப்பு' என்பது உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும். அந்தச் சமயத்தில், கவனமாக இருந்து அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இதற்கு உதாரணமாக ஒரு குட்டிக்கதை.

அலெக்சாண்டிரியா நகரில் ஒரு நூல் நிலையம் இருந்தது. அதில் திடீரென்று ஒரு தீ விபத்து. ஏராளமான புத்தகங்கள் தீயில் எரிந்து போயின. எஞ்சிய ஒரு சில புத்தகங்களை ஒருவர் வாங்கினார். அவற்றைப் படித்துப் பார்த்தபோது, ரொம்ப போரடித்ததால், தூக்கிப் போட்டு விட்டார்.

தெருவில், அதைக் கண்டெடுத்த ஒருவர், அந்தப் புத்தகத்தைப் புரட்டிய போது, அதனுள்ளே ஒரு மெல்லிய தகடு இருப்பதைக் கண்டார். அதை எடுத்துப் பார்த்தபோது, தொட்டதைத் தங்கமாக்கும் அதிசயத் தன்மை கொண்ட கூழாங்கல் ஒன்றின் இருப்பிடத்தைக் குறிப்பிடும் ரகசியம் தகட்டில் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். ஒரே சந்தோஷம் அவருக்கு.

ரகசியத்தைப் படித்துத் தெரிந்து கொண்டார். கடற்கரையில் உள்ள ஏராளமான கூழாங்கற்களிலே ஒன்றே ஒன்றுதான், தொட்டதைத் தங்கமாக்கும் அதிசய குணம் படைத்தது என்பதே அந்த ரகசியம்.

அந்த அதிசய கூழாங்கல்லை எப்படி கண்டுபிடிப்பது?

உள்ளங் கையில் வைத்தால், சாதாரண கூழாங்கற்கள் சில்லென்றும் அதிசயக்கல் வெது வெதுப்பாகவும் இருக்கும் என்று தகட்டில் கூறப்பட்டிருந்தது. தனக்குச் சொந்தமான சிறு நிலத்தை விற்று, அந்தப் பணத்தை வைத்து, கடற்கரையிலேயே ஒரு சிறு குடிசை போட்டுக் கொண்டார் அவர். தினமும் காலையில் கடற்கரையிலிருந்து ஒவ்வொரு கல்லாக எடுப்பதும், சில்லென்று இருக்கும் அந்தக் கல்லை, கடலுக்குள்ளே எறிந்து விடுவதும் அவரது பழக்கமாகி விட்டது. (எடுத்த கல்லையே மறுபடி எடுத்து, நேரத்தை வீணாக்காமல் இருப்பதே கல்லை, கடலுக்குள் எறிவதன் நோக்கம்.)

பல நாட்கள், மாதங்கள், வருடங்கள் ஓடிவிட்டன. அதிசயக் கல்லை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருநாள், பழக்க தோஷத்தில் ஒரு கல்லை எடுத்து, உள்ளங்கையில், சில விநாடிகள் வைத்திருந்து தூக்கிக் கடலில் எறிந்த பின்னர், அவரது கையில் வெதுவெதுப்பான உணர்வு ஏற்பட்டது.


ஆ! அதுதான் இத்தனை வருடம் தேடிய அதிசய கூழாங்கல்!

ஆனால், இத்தனை வருடங்களாக, கல்லை எடுப்பது, உள்ளங்கையில் சில விநாடிகள் வைத்திருப்பது, பின் தூக்கிக் கடலில் எறிவது என்று பழகிப் போன அவரது கைகள், சட்டென்று வெதுவெதுப்பை உணரத் தவறிவிட்டன. அவரது இத்தனை கால முயற்சியும் வீணாகிவிட்டது!

ஆகவே, நாம் எப்போதும் மிகவும் ஜாக்கிரதை உணர்வுடன் இருந்து, வாய்ப்புகளை மிகச் சரியாகக் கண்டு கொண்டு, பயன்படுத்திப் பயனடைய வேண்டும்!

* வருட எண் புதிரின் விடை 1691

- கௌதம் ராம்


அடுத்த இதழில்...
ரா. சுந்தரமூர்த்தி
எழுதும்
சின்னமனூர் சின்னப்பட்டாளம்
திகில், திருப்பங்கள் நிறைந்த
புதிய தொடர்கதை ஆரம்பம்

முட்டை எந்தப் பக்கம் விழும்?

I ஒரு குடும்பத்திலுள்ள பெண்கள் ஒவ்வொருவருக்கும் சம எண்ணிக்கையிலான சகோதரிகளும், சகோதரர்களும் உள்ளனர். ஆனால் ஒவ்வொரு ஆணுக்கும் சகோதரர்களைப் போல் இருமடங்கு சகோதரிகள் உள்ளனர் எனில் எத்தனை பெண்கள்? எத்தனை ஆண்கள்?

— பெ. நடராசன்
ஒன்பதாம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை,
இராமநாதபுரம்.



II எங்கள் வகுப்பில் உள்ள மாணவர்களில் கால் பந்து விளையாடுபவர்களின் எண்ணிக்கை 45. மட்டைப்பந்து விளையாடுவோரின் எண்ணிக்கை 36. இரண்டும் விளையாடுபவர்களின் எண்ணிக்கை 15. எனில் அவ்வகுப்பில் உள்ள மாணவர்கள் எத்தனை பேர்?

— டி. சிவபாரதி,
மல்லிபாளையம்,
கோபி, ஈரோடு.

III ஒரு மீன்தொட்டியில் பத்து மீன்கள் உள்ளன. அவற்றில் ஒன்று திடீரென காணாமல் போய் விடுகிறது. இப்பொழுது தொட்டியிலுள்ள தண்ணீரின் அளவு அதிகரிக்குமா, குறையுமா அல்லது அதே அளவே இருக்குமா?

— ஆர். குட்டிபிரசன்னா,
காந்திகிராமம், கரூர்.

IV தெற்கு வடக்காகக் கட்டப்பட்ட ஆறு அடி உயரம் உள்ள மதிலின் மேல் ஒரு சேவல் அமர்ந்து உள்ளது. அதன் தலை கிழக்கு நோக்கியும் பின் பகுதி மேற்கு நோக்கியும் உள்ளது. அது இடும் முட்டை எந்தப் பக்கம் விழும்?

— ஏ.எஸ். யோகானந்தம்,
ஔவையார்பாளையம்.

V காளமேகப் புலவர், 'பறவைகளுக்கு ஒன்பது கால்கள் உள்ளன. யானைகளுக்குப் பதினேழு கால்கள் உள்ளன' என்று சொல்கிறார். இது சரியா? தவறா?

VI ஒருவர் ஒரு கம்பெனியில் 30 நாட்கள் வேலை செய்ய ஒப்புக் கொண்டார். இவர் வேலைக்குச் செல்லும் ஒவ்வொரு நாளுக்கும் கூலி 18 ரூபாய். இவர் வேலைக்குச் செல்லாத ஒவ்வொரு நாளுக்கும் கம்பெனிக்கு அபராதமாக 15 ரூபாய் கட்ட வேண்டும். இந்த அடிப்படையில் இவர் சம்பாதித்த மொத்த கூலிப் பணம் 276ரூபாய். அப்படியென்றால் இவர் எத்தனை நாள் வேலைக்குச் சென்றார்? எத்தனை நாள் வேலைக்குச் செல்லவில்லை?

— எம். வினோத்,
விருத்தாச்சலம்.

விடை: 64 ஆம் பக்கம்



தீர்த்த யாத்திரை செய்து கொண்டே வரும்போது, ஒரு சமயம் பாண்டவர்கள் குப்த க்ஷேத்திரம் வந்தனர். அவர்களுடன் திரௌபதியும் வந்திருந்தாள்.

அச்சமயம், பர்பரீகன் என்ற இளைஞனும் அங்கு தான் தங்கியிருந்தான். அவன் பீமசேனனின் பேரன், அதாவது கடோத்கஜனின் மகன். இந்த விவரம் பாண்டவர்களுக்குத் தெரியாது. பர்பரீகனும் அறிந்து வைத்திருக்கவில்லை.

பாண்டவர்கள் - திரௌபதி முதலானோர் நடந்து நடந்து மிகவும் களைத்துப் போயிருந்தார்கள். இருந்தாலும் சண்டிகா தேவியைத் துதித்து விட்டு, ஓய்வு பெறுவதற்காக, அந்த இடத்திலேயே எல்லாரும் உட்கார்ந்து விட்டார்கள்.

அப்போது, பீமசேனனுக்கு மிகவும் தாகம் எடுத்தது. விக்கல் வேறு. நாக்கும் வறண்டு உலர்ந்தே போய்விட்டது. தண்ணீருக்காகத் தவித்தான்.

அதைக் கண்ட யுதிஷ்டிரர், ''பீமா..! இங்கிருந்து சற்று தூரத்தில் ஒரு நல்ல நீர்க் குளம் இருக்கிறது. அங்கு போய்த் தண்ணீர் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொண்டு வா..'' என்று, அக்குளத்துக்கான வழியைச் சுட்டிக் காட்டினார்.

பீமசேனன் கிளம்புவதற்குப் பரபரத்தான்.

கூடவே யுதிஷ்டிரர், ''பீமா! ஒன்றை நினைவில் வைத்துக் கொள். குளத்து நீரை வெளியே மொண்டு வந்து வைத்துக் கொண்டு, அதில் உன் கைகால்களைக் கழுவிச் சுத்தம் செய்து கொள். அதன் பிறகு தண்ணீரைப் பருகு...'' என்று கூறினார்.

தாகத்தின் களைப்பிலும், கிளம்பும் பரபரப்பிலும் பீமன், யுதிஷ்டிரர் கூறியதைச் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. நேராகச் சென்று, குளத்தில் இறங்கிக் கைகால்களைக் கழுவிக் கொள்ளத் தொடங்கினான்.

அப்போது பர்பரீகன் குளத்துக்குச் சற்று தூரத்தில் தான் இருந்தான். பீமன் குளத்தினுள் இறங்கிக் கைகால் கழுவுவது அவன் கண்ணில் பட்டுவிட்டது. உடனே அவன் வெகுண்டு எழுந்தான். குளக்

ஜானகி மணாளன்



பீமனும் பர்பரீகனும்

கரைக்கு ஓடி வந்தான். குளத்தினுள் இருந்த பீமனைப் பார்த்து உரக்கக் கூச்சலிடத் தொடங்கி விட்டான்.

“யார் ஐயா குளத்தில் இறங்கிக் கை கால் கழுவுவது.? இது நல்ல நீர்க்குளம்... தெரியாதா உமக்கு..? இங்கிருந்து நீர் எடுத்துச் சென்றுதான் ஐயா, நான் தேவிக்கு அபிஷேகம் செய்கிறேன். அந்தக் குளத்து நீரை இப்படி அசுத்தம் செய்கிறீரே..? இது நியாயமா? உமக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்க வேண்டாமா? இதுதான் நீர் தீர்த்த யாத்திரை செய்யும் லட்சணமா...?'' என்று இன்னும் பலவாறு கூச்சலிட்டான் பர்பரீகன்.

பீமன் மிகுந்த பலசாலி. அது பற்றி அவனிடம் சற்று கர்வம்கூட உண்டு. ஆகவே, அவன் எதற்கும் எவரிடமும் பணிந்து அல்லது அடங்கிப் போகவே மாட்டான். எனவே, பதிலுக்கு அவனும் கர்ஜிக்கலானான்.

“குளத்து நீர் என்றால் அது இறங்கி நீராடத்தானே உள்ளது. இல்லாவிட்டால் படிக்கட்டுகள் அமைப்பார்களா? அப்படியிருக்க நீ யாரப்பா என்னைத் தடை செய்ய..? தீர்த்த யாத்திரை என்பதே என்ன? ஆங்காங்கே உள்ள புனிதக் குளங்களில் இறங்கி ஸ்நானம் செய்வது தானே... நான் இறங்கிக் கை கால் கழுவியது எப்படி தவறாகும்..?” என்றான்.

அதற்குப் பர்பரீகன், “கிணற்றில், நாம் எல்லாம் என்ன உள்ளே இறங்கியா குளிக்கிறோம்..? மொண்டு எடுத்துத்தானே வெளியில் கை கால் கழுவுகிறோம். அதே போலத்தான் சுத்த நீர்க் குளத்திலும்...

தவிரவும், இது கடவுளுக்கு அபிஷேக நீர் எடுக்கும் குளம்... இதில் இறங்கி, இப்படி அசுத்தம் செய்வதெல்லாம் மகா பாவச் செயல். சாஸ்திரங்கள் இதையெல்லாம் தடை செய்துள்ளன. ஆகவே, குளத்தை விட்டு, நீங்கள் உடனே கரையேறி மேலே வாருங்கள்'' என்றான்.

பர்பரீகன் சொன்னது தான் நியாயம். ஆனால், பீமசேனன் அது பற்றியெல்லாம் கவலைப்படவே இல்லை. தொடர்ந்து குளத்து நீரில் நின்று கை கால் கழுவிக் கொண்டே இருந்தான்.

அதைக் கண்டு மேலும் ஆத்திரம் அடைந்த பர்பரீகன், ஒரு பெரிய செங்கல்லை எடுத்துப் பீமனைக் குறிவைத்து வீசினான். நல்ல வேளை! அதற்குள் பீமன் விலகிக் கொண்டு தப்பித்து விட்டான்.

என்றாலும், குளத்தை விட்டுக் கரையேறிய பீமன், பர்பரீகன் மீது பாய்ந்து அவனைத் தாக்கினான். இருவரும் கட்டிப் புரண்டு மல்யுத்தம் புரிந்தனர். ஒருவருக்கு இன்னொருவர் சிறிதும் சளைக்கவில்லை.

இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு, பீமசேனன் சற்றுக் களைத்துப் போனான். உடனே பர்பரீகன், பீமனைத் தனது இரு கைகளாலும் தலைக்கு மேலே தூக்கிக் கொண்டு, சமுத்திர நீரில் வீசுவதற்காகக் கடற்கரைக்கு விரைந்தான்.

அப்போது, ஒரு அசரீரி ஒலி கேட்டது. "ஏ... அரக்கர் குல வீரனே! உடனே, நீ பீமனைக் கீழே இறக்கி விடு. அவன் உன்னால் மதிக்கப்பட வேண்டியவன். அவன் வேறு யாரும் அல்ல. உன்னுடைய 'தாத்தா'வேதான்.."

அதைக் கேட்டுப் பர்பரீகன் திடுக்கிட்டான். பீமனைக் கீழே இறக்கி விட்டான். அவன் கால்களில் விழுந்து வணங்கித் திரும்பத் திரும்ப அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.


பீமசேனனும், தனது பேரன் பர்பரீகனைத் தூக்கி நிறுத்தி, அவனை மார்போடு அணைத்துக் கொண்டான். "மகனே! நல்ல நீர்க் குளத்தில் இறங்கி, அதன் நீரை அசுத்தம் செய்த என் செயல் மிகமிகத் தவறானதுதான். நீ என் தவறைச் சுட்டிக்காட்டி என்னைத் திருத்த முயன்றாய்... இதில் உன் தப்பு எதுவும் இல்லை. நம் குலத்தில் உன்னைப் போன்ற வீரமும், துணிவும், நேர்மையும் மிக்க தர்மாத்மா தோன்றியுள்ளது கண்டு நான் பெருமைப் படுகிறேன்..." என்றான்.

இருந்தாலும், பர்பரீகன் வேதனைப்படுவதை நிறுத்தவில்லை. "நான் மாபெரும் குற்றம் இழைத்துவிட்டேன். நான் இவ்வுலகில் பிறக்கக் காரணமாக இருந்த என் பாட்டனாராகிய உங்களையே கடலில் தூக்கிப் போட்டு அழிக்க முற்பட்டேனே.. நான் எத்தனை பெரும்பாவி. அதற்குப் பிராயச்சித்தமாக நான் தான் கடலில் விழுந்து என்னை அழித்துக் கொள்ள வேண்டும்.." என்று புலம்பினான். கடலில் குதித்துத் தன்னை மாய்த்துக் கொள்ளவும் தயாராகிவிட்டான்.

அதற்குள் சண்டிகா தேவி அங்கு காட்சியளித்து விட்டாள். "பர்பரீகனே! வீணில் உயிரை மாய்த்துக் கொள்ளாதே! தற்கொலை மகாமகாப் பாவமான செயல். நடந்தவை எல்லாம், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் நடந்துவிட்ட செயல்கள்தான். நீ குற்றவாளியே அல்ல. உன் பாட்டனார் பீமனும் உன்னை அவ்வாறு கருதவில்லை. மாறாகத் தனது பேரனாகிய உன்னைப் பற்றிய செய்தியை அறிந்து, உன்னைப் பார்த்ததில் மட்டற்ற மகிழ்ச்சியே அடைகிறான்..." எனக் கூறி மறைந்தாள்.


பீமன் மீண்டும் தன் பேரனை நெஞ்சார வாரி அணைத்துக் கொண்டான். பேரனின் பராக்கிரமத்தை எண்ணிப் பீமனும் மற்ற பாண்டவர்களும் அகம் மகிழ்ந்தனர்.

பன்னாட்டுப் பறவைகள்



வேதாரண்யம் அருகிலுள்ள கோடிக்கரையில் பறவைகளுக்கான பாதுகாப்பு மையம் உள்ளது. இங்கு ஆஸ்திரேலியா, ஐரோப்பா, ரஷ்யா, சைபீரியா போன்ற பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வரும் கொக்கு வகைகள், பெலிகன் மற்றும் பல அதிசயப் பறவைகள் ஆயிரக் கணக்கில் வந்து தங்கி இனப்பெருக்கம் செய்து திரும்பிச் செல்கின்றன. நவம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை இங்கு பறவைகளைக் காணலாம்.

- டி.ஆர்.பரிமளம்



குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. போதி மரத்தடியில் ஞானம் பெற்றவரின் பிற்பாதிப் பெயர் (4)

3. பெருங்கடல்களில் ஒன்று (4)

5. நம் நாட்டின் பழம் பெரும் நடனக்கலை (4)

7. அர்ஜுனன் இந்த வித்தையில் சிறந்தவன் (2)

8. தாவரங்கள் இதன்மூலம் தண்ணீரை உறிஞ்சிக் கொள்கின்றன (2)

13. சட்டம் படித்து, நீதிமன்றத்தில் வாதாடுகிறவர் (4)

வலமிருந்து இடம்

2. மதுரையில் இந்தக் கோயில் பிரசித்தம் (4)

10. வங்காளம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)

12. ஆண் யானைக்கு இது உண்டு; பெண் யானைக்கு இது இல்லை (4)

14. நவரத்தினங்களில் ஒன்று (4)

மேலிருந்து கீழ்

1. புராணத்தில் பறந்து வரும் விமானம் (5)

2. எஞ்சியதை இப்படியும் அழைக்கலாம் (3)

4. பிறப்பு (3)

6. தஞ்சாவூர் பொம்மை, __________ ஆட்டும் பொம்மை (2)

10. உணவு தானியம் விளையும் இடம் (3)

கீழிருந்து மேல்

5. பறவைக்கு இன்னொரு பெயர் (3)

9. தாத்தா, பாட்டி சொல்லக் கேட்பது __________ (2)

11. பால் புளித்தால் __________ (3)

13. கிருஷ்ணர் அரக்கர்களை __________ செய்தார் (3)

14. போட்டி என்பதை இப்படியும் கூறலாம் (5)

- ப. கபிலன், ஏழாம் வகுப்பு,
எஸ்.எம்.ஹெச். பள்ளி,
சீர்காழி.


விடை 64 ஆம் பக்கம்

பிரபலங்களின் வாழ்வில்...

முட்டையை நிற்க வைக்க

கொலம்பஸ் வெற்றிகரமாக அமெரிக்காவைக் கண்டுபிடித்த பிறகு தன்னுடைய தாய்நாட்டிற்கு வந்தார். அங்கு அவருக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. அந்தப் பாராட்டு விழாவில் பலர் கலந்து கொண்டனர். அதில் கலந்து கொண்ட ஒருவனுக்குக் கொலம்பஸைப் பார்த்து மிகவும் பொறாமை. வேண்டுமென்றே கொலம்பஸ் அவர்களின் காதில் விழும்படி "இதென்ன பெரிய சாதனை, எல்லோராலும்தான் செய்ய முடியும்" என்று இகழ்வாகக் கூறினான். இதைக் கேட்ட கொலம்பஸுக்குக் கோபம் வந்தது. அடக்கிக்கொண்டு அந்த ஆளைக் கூப்பிட்டு "உன்னால் இந்த முட்டையை இந்த மேஜையில் நிற்க வைக்க முடியுமா?" என்று கூறி அவன் கையில் ஒரு முட்டையைக் கொடுத்தார். பலமுறை முயன்று பார்த்தும் அவனால் முட்டையை நிற்க வைக்க முடியவில்லை. தோல்வியை ஒப்புக்கொண்டான். உடனே கொலம்பஸ் அதைக் கையில் வாங்கி முட்டையில் சிறிய ஓட்டை போட்டு மேஜையின் மேல் நிற்க வைத்தார். "பார்த்தாயா ஒரு சின்ன முட்டையை நிற்க வைக்கவே சாமர்த்தியம் தேவைப்படுகிறது. இதிலிருந்து எல்லாம் விளங்கி இருக்கும் என்று நினைக்கிறேன்" என்றார். அந்த ஆள் மன்னிப்புக் கேட்டான்.

- பா. கவிதா
பன்னிரண்டாம் வகுப்பு,
சுமேரியல் ஜெயின் பப்ளிக் பள்ளி,
நியூடெல்லி.



• டி.கே.சி.

நல்ல கிண்ணம் நல்ல எண்ணம்

புத்த பகவானும் அவருடைய சீடர்களும் காட்டில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் அங்கு வந்த திருடன் ஒருவன் அவர்களிடமிருந்த ஒரு கிண்ணத்தை எடுத்துக் கொண்டு விரைந்து ஓடினான்.

புத்தர் தன் சீடர்களில் ஒருவனை எழுப்பினார். "அவன் ஓட்டைக் கிண்ணத்தை அல்லவா தூக்கிக்கொண்டு போகிறான். இந்த நல்ல கிண்ணத்தை அவனிடம் கொடுத்துவிட்டு வா" என்று வேறொரு கிண்ணத்தை எடுத்துத் தந்தார்.

சீடனும், திருடனைக் கண்டுபிடித்து, புத்தரின் வார்த்தைகளைக் கூறி, நல்ல கிண்ணத்தை அவனிடம் கொடுத்தார். புத்தரின் அன்பு, திருடனின் நெஞ்சைத் தொட்டு அவனையும் அவருடைய சீடராக மாற்றிவிட்டது.


ரசிகமணியின் பண்பு!

ரசிகமணி டி.கே.சி.யிடம் இளைஞர் ஒருவர் வந்து "ஊருக்குச் செல்ல பணம் குறைகிறது. கொடுத்து உதவ வேண்டும்" என்று கேட்டார். உடனே அவர் 25 ரூபாய் கொடுத்து உதவினார்.

அருகிலிருந்த டி.கே.சியின் நண்பருக்கு இச்செயல் பிடிக்கவில்லை. "ஐயா... அந்த



கானன் டாயல்



கொலம்பஸ்

ஆள் நல்லவராகத் தெரியவில்லை. நீங்கள் கொடுக்கின்ற பணத்தையும் அவர் நல்லவிதமாகப் பயன்படுத்துவார் என்று தோன்றவில்லை" என்று குறை பட்டார்.

அதற்கு டி.கே.சி. சிரித்துக்கொண்டே "எனக்கும் அவரைப் பற்றித் தெரியும். நான் தராவிட்டால் அவர் வேறு யாரையாவது கேட் பார். அடுத்தவர்கள் தொல்லைப்பட வேண் டாமே என்றுதான் கொடுத்தேன்" என்றார்.

- பாலு, சென்னை.

முடியுமா?

சண்டை

ஷெர்லாக் ஹோம்ஸ் கதைகளை எழுதிப் புகழ் பெற்ற சர். ஆர்தர் கானன் டாய லுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. இறந் தவர்கள் உயிரோடிப்பவர்களிடம் தொடர்பு கொண்டு பேச முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக் கையே அது. அவருடைய எழுத்தாளர் நண்பர் ஒருவர் திடீரென இறந்துவிட்டார். சில நாட்கள் கழிந்த பின்னர் கானன் டாயலிடம் ஒருவர் கேட்டார்: ''இறந்து போன நண்பர் உங்களுடன் பேசினாரா?''

''இதுவரை இல்லை.''

''அப்படியென்றால் உங்கள் நம்பிக்கை பொய்யானதுதானே?''

''அது எப்படி? இனியும்கூட அவர் என்னுடன் பேசுவார் என்று நான் எதிர்பார்க்க வில்லையே!''

''ஏன்?''

''அவர் சாகும்போது நாங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொண்டு ஒருவருக் கொருவர் பேசிக் கொள்ளாமலே அல்லவா இருந்தோம்'' என்றார்!

**- எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.**

மதிப்பு

மாவீரன் அலெக்சாண்டர் பல நாடுகள் மீதும் படை எடுத்து வெற்றி களைக் குவித்துக் கொண்டிருந்தார். அப் போது தன் உடைமைகளை வைத்திருக் கும் பெட்டிகளுடன் மறக்காமல் ஒரு பெட்டியை மிகவும் கவனமாக எடுத்துச் செல்வது அவரது வழக்கம்.

அதில் சிறப்பான ஆயுதமோ அல்லது விலை மதிப்பு இல்லாத பொன்னோ வைரமோ எதுவும் இல்லை. அந்தப் பெட் டியில் கிரேக்க நாட்டு ஹோமர் என்னும் கவிஞர் எழுதிய இலியட், ஒடிஸ்ஸி போன்ற காப்பியங்கள் இருக்கும். அதைத் தன்னுடன் எப்போதும் அவர் வைத் திருப்பார். இவை நம் நாட்டு ராமாயணம் மகாபாரதம் போன்றவை.

ஒருமுறை இவரது படையினர் எதிரிகளிடமிருந்து தங்கப் பெட்டி ஒன்றினைக் கைப்பற்றினர். அதை எடுத்து வந்த தளபதி அலெக்சாண்டரிடம் "அரசே! இந்த விலை மதிக்க முடியாத பெட்டியை எங்கே வைப்பது?'' என்று கேட்டார்.

அதற்கு அலெக்சாண்டர் ''நீ நினைப்பது போல் இது விலை மதிக்க முடியாதது அல்ல. இதன் மதிப்பை ஒரு பொற்கொல்லரிடம் கேட்டால் மதிப் பிட்டுக் கூறி விடுவார். என்னிடம் உள்ள காப்பியங்களைப் பத்திரமாக இதில் வைப் பதற்குப் பயன்படுத்துங்கள். அப்போது தான் இந்தப் பெட்டிக்கு உண்மையான மதிப்பும் மரியாதையும் வரும்'' என் றார்.

- ஆர். அஜிதா, கம்பம்.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....


....

ஆறு மாத சந்தா (*6 இதழ்கள்*) ரூபாய் *36/-* ஒரு வருட சந்தா (*12 இதழ்கள்*) ரூபாய் *72/-*. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை **'Gokulam Tamil'** என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.


உங்களுக்குத் தெரியுமா?

● உலகிலேயே மிகவும் உயரமான மிருகம் ஒட்டகச் சிவிங்கி. கழுத்தைத் திருப்பாமலேயே தன் பின்புற முள்ளவற்றைப் பார்க்கும் திறன் இதற்கு உண்டு. நாக்கு இருந்தும் கூட, இதனால் தெளிவான சத்தத்தை எழுப்ப முடியாது.




● ஒட்டகத்திற்கு நீந்தத் தெரியாது. தண்ணீரில் இறங்கினால் மூழ்கி விடும்.

● பூனையின் முகத்தில் காணப்படும் மீசையின் உதவி கொண்டுதான் அது, தான் செல்லும் வழியை அறிந்து கொள்கிறது.



● 'ராக்கூன்' என்றொரு வகை கரடி இனத்தைச் சேர்ந்த மிருகமானது தனது உணவினைக் கழுவிய பிறகே உண்ணும்.



● நாகமானது, அதன் நாக்கின் மூலமே நுகர்கிறது. உறங்கும்போதும், விழித்திருக்கும் போதும் மீனும், நாகமும் கண்களை மூடுவதில்லை.

● சிறுத்தை, மணிக்கு 70 மைல்கள் வேகத்திலும், சிங்கமும், மானும் மணிக்கு 50 மைல்கள் வேகத்திலும், குதிரை 48 மைல்கள் வேகத்திலும், கங்காரு 30 மைல்கள் வேகத்திலும், யானை 25 மைல்கள் வேகத்திலும் வேட்டை நாய் 36 மைல்கள் வேகத்திலும் ஓடக் கூடியன.



- எஸ். ராஜகோபால்,
திருச்சி - 16.

கோமா எப்படி ஏற்படுகிறது?

● ஆர். கண்மணிக்குமார்,
கோபிச்செட்டிப்பாளையம்

? பொதுவாகப் பழங்களைச் சாப்பிடுவதால் என்ன பயன் டாக்டர்?

! பழங்களில் மாவுச்சத்து, நார்ச்சத்து, வைட்டமின்-சி, தாதுச்சத்து ஆகியவை உள்ளன. பழுக்காத பழங்களில் மாவுச்சத்தானது 'ஸ்டார்ச்'சுப் பொருளாக இருக்கும். பழுத்த பழங்களில் அச்சத்து 'சர்க்கரை'யாக இருக்கும். பழங்கள் இனிப்பதற்கு இந்தச் சர்க்கரைதான் காரணம். மாவுச்சத்து நம் உடலுக்குத் தேவையான சக்தியைத் தருகிறது. இதனால் உடற்சோர்வு நீங்கி, புத்துணர்ச்சி பிறக்கிறது. புரதமூலக்கூறுகளான அமினோ அமிலங்கள், கொழுப்பு மூலக்கூறுகளான கொழுப்பு அமிலங்கள் உற்பத்தியாவதற்கும் மாவுச்சத்து தேவைப்படுகிறது. நார்ச்சத்து நாம் உண்ணும் உணவு நன்றாக செரிக்கப்படுவதற்கு உதவுகிறது. அத்தோடு, மலச்சிக்கல் ஏற்படுவதைத் தவிர்க்கிறது. புளிப்புச் சுவை உள்ள எலுமிச்சை, ஆரஞ்சு, நெல்லி, புளியம்பழம், தக்காளி ஆகியவற்றில் வைட்டமின் - சி நிறைந்துள்ளது. இச்சத்து உடல் அணுக்களில் நடக்கின்ற வளர்சிதை மாற்றப் பணிகளுக்கு உதவுகிறது. பொதுவாகப் பழங்கள் புதிதாக இருக்கும்போது அவற்றில் சத்துகள் அதிகமாக இருக்கும். நாட்பட, நாட்பட சத்துகளின் அளவு குறைந்துவிடும். அதுபோல் சமைக்கும்போதும் சிறிதளவு சத்துகள் அழிந்துவிடும். ஆகையால், பழங்களைப் பறித்ததும் பச்சையாகச் சாப்பிடுவதுதான் மிக நல்லது. நாம் ஒவ்வொருவரும் தினமும் 30 கிராம் பழத்தை நம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கோடைகாலத்தில் இதைவிட அதிகமாகப் பழங்களைச் சாப்பிட வேண்டியது மிக மிக அவசியம்.

● டி.எம். முருகானந்தம்,
திருவைகாவூர்.



? உடல் பருமனைக் குறைக்க எவ்வகை உணவுகளைக் குறைக்க வேண்டும்?

! கொழுப்புச் சத்து நிறைந்துள்ள நெய், வெண்ணெய், வனஸ்பதி, தேங்காய் எண்ணெய், பாமாயில், இறைச்சி, முட்டை, பால், பாலாடைக்கட்டி, சாக்லெட், கிரீம், கேக் வகைகள், ஐஸ் கிரீம், முந்திரிப்பருப்பு, பிஸ்தா, எண்ணெயில் தயாரிக்கப்பட்ட தின்பண்டங்கள் முதலிய உணவுகளைக் குறைக்க வேண்டும். அடிக்கடி உணவு உண்ணும் பழக்கத்தைக் கைவிட வேண்டும். நொறுக்குத் தீனிகளை அறவே உண்ணக்கூடாது. உடற்பயிற்சிகளும் அவசியம். குறிப்பாக, தினமும் 40 நிமிடங்களுக்கு வேகமாக நடப்பது நல்ல பலனைத் தரும்.

● து. கலாவள்ளி,
தே. கல்லுப்பட்டி



? தண்ணீரைக் கொதிக்க வைத்து ஆற வைத்துக் குடித்தால், அதில் இயற்கையாக உள்ள சத்துகள் அழிந்துவிடும் என்பது உண்மையா டாக்டர்?

!ஓரளவிற்கு உண்மைதான் கலாவள்ளி. தண்ணீர் மட்டுமல்ல, எந்த ஒரு உணவுப் பொருளும் வெப்பத்தாலும் நீராவியினாலும் சிறிதளவு சத்துகளை இழப்பது உண்மை. ஆனால் தண்ணீரைப் பொறுத்தவரை, அதைக் கொதிக்க வைத்து, ஆற வைத்துக் குடித்தாலும் நமக்குத் தேவையான சத்து அதிலிருந்து

டாக்டர் கு. கணேசன்

கேட்கட்டுமா டாக்டர்?

கிடைத்து விடும். சுகாதாரம் குறைந்துள்ள நம் நாட்டில் தண்ணீர் மூலம் தான் பெரும்பாலான தொற்று நோய்கள் பரவுகின்றன. டைபாய்டு காய்ச்சல், மஞ்சள் காமாலை, காலரா, வயிற்றுப்போக்கு, சீதபேதி, குடல் புழுக்கள் போன்றவை அவற்றுள் முக்கியமானவை. இந்த நோய்களைத் தடுக்க வேண்டுமெனில் கண்டிப்பாகக் கொதிக்க வைத்து ஆற வைத்த தண்ணீரையே நாம் குடிக்க வேண்டும்.

● யமுனா ரெங்கநாதன்,
சென்னை - 97


? ஒரு நோயாளிக்குக் 'கோமா' எவ்வாறு உண்டாகிறது?


! ஒருவர் மயக்க நிலையில் உள்ளார் என வைத்துக் கொள்வோம். அவர் பெயரைச் சொல்லி அழைத்துப் பார்க்கிறோம். அடித்துப் பார்க்கிறோம்; ஊஹூம். அவர் விழித்துப் பார்க்க வில்லை; இப்படி எந்தவொரு புறத் தூண்டலின் மூலமும் ஒருவரை விழிப்படையச் செய்ய இயலாத அளவிற்கு அவர் சுயநினைவிழந்து இருப்பாரென்றால் அந்த நிலைமையை 'ஆழ்நிலை மயக்கம்' (COMA) என்கிறோம். இதுவொரு மோசமான மயக்க நிலை. உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துகின்ற மயக்கநிலை. இதற்கு அடிப்படைக் காரணம், மூளையிலுள்ள 'சுயநினைவுப்பகுதி' செயலிழந்து விடுவது தான். மூளையின் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு பகுதி பொறுப்பு. ஏதாவது ஒரு காரணத்தால் சுய நினைவுப் பகுதி செயலற்றுவிடும். அப்போது ஆழ்நிலை மயக்கம் ஏற்படும். தலையில் அடிபடும்போது மூளைக்குள் இரத்த நாளங்கள் சிதைந்துவிடலாம் அல்லது இரத்தம் உறைந்து கட்டியாகிவிடலாம். இதனால் மூளை அணுக்களுக்குத் தேவையான இரத்தம் கிடைக்காமல் அவை செயலற்றுப் போகலாம். சமயங்களில் மூளை அணுக்கள் இறந்தும் விடலாம். சிலருக்குத் தலையில் அடிபடும்போது கபால எலும்பு முறிந்து மூளைத் திசுக்களைக் கிழித்து சிதைத்து விடலாம். இவற்றின் விளைவாக, மூளை செயலிழந்துவிடும். சர்க்கரை நோயைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரித்துவிடும். அப்போது மூளை செயலிழக்கும். விளைவு, ஆழ்நிலை மயக்கம். இரத்த அழுத்தம் அளவுக்கு மீறி அதிகரித்துவிட்டால் பக்கவாதம் ஏற்படும். அப்போதும் இந்த மாதிரி மயக்கம் வரலாம். கடுமையான இதயபாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு, வளர்சிதை மாற்றப் பணியில் உண்டாகும் சிக்கல்கள் ஆகியவையும் இந்தவகை மயக்கநிலையை உண்டாக்கும். நச்சுப் பொருள்கள், போதை மருந்துகள் மற்றும் உறக்க மருந்துகள் இவற்றில் ஏதாவது ஒன்றை உட்கொள்ளுவதாலும் ஆழ்நிலை மயக்கம் ஏற்படும்.








வெள்ளை யானை
பர்மியக் கதை
ஒருநாள் சலவைத் தொழிலாளி தாமுவைப் பார்க்க பானை செய்யும் கோபால் வந்தான்.
தாமு, இந்தச் சட்டையை நன்றாகச் சலவை செய்து வை. நாளைக்கு அரசரைச் சந்திக்கப் போறேன்.
கண்டிப்பாகத் தந்து விடுகிறேன்.
சட்டை பத்திரம். என்னிடம் இருப்பது இது ஒண்ணுதான்.
எனக்குத் தெரியாதா? நாளை வா.
மறுநாள் காலை —
என்னது? வெள்ளைச் சட்டையைத் தர்றே? நான் நீலச் சட்டைதானே கொடுத்தேன்?
என்ன சொல்றே? இந்தச் சட்டையை வெள்ளையாக்க நான் எவ்வளவு போராடினேன் தெரியுமா? பணத்தைக் கொடு.
©'96 MALAY FEATURES P.B. 508 KOTTAYAM - 1
பணமா? என் நீலச் சட்டையை வெள்ளையாக்கிய உனக்குப் பணமும் தரணுமா?
உன்னால் கொடுக்க முடியுமா, முடியாதா?
ஐயோ, அரசரைச் சந்திக்கணுமே. நேரமாகுது. பணத்தைக் கொடுத்துட்டுக் கிளம்பலாம்.
கோபால்! அரசிக்கு உடல் நிலை சரியில்லை. கஷாயம் போடுவதற்கு நல்ல பானை ஒன்று செய்து கொடு.


பேசிக் கொண்டிருக்கும்போது –
கோபால், உன் சட்டை எவ்வளவு வெள்ளையாக இருக்கிறது.
தாமுவின் திறமைதான் இதற்குக் காரணம். அவன் யானையைக் கூட வெள்ளை யாக்கி விடுவான்.
உண்மையாகவா! காவலாளிகளே தாமுவை அழைத்து வாருங்கள்.
கோபால் சொன்னான், நீ யானையைக் கூட வெள் ளையாக்கி விடுவாயாமே! பட்டத்து யானையை வெள்ளையாக்கு.
கோபால் உன்னைக் கவனிச்சுக்கிறேன்.
அரசே! என்னிடம் யானை யைப் போடும் அளவுக்குப் பாத்திரம் இல்லையே?
கவலைப்படாதே! கோபால் மிகப் பெரிய பானையைக் கொண்டு வருவான்.
கோபால் பெரிய பானையைக் கொண்டு வந்தான்.
ம்... தாமு யானையை வெள் ளையாக்கு. இல் லையென்றால் உன் தலை இருக்காது.
சோப்புத் தூள் வேணும்.
ஹா....ஹா...
யானை பானைக்குள் கால் வைத்தது.
மகாராஜா இந்த மாதிரி உடையக் கூடிய பானை வேண்டாம்.
உடையாத பானையா?
கோபால் உடையாத பானை யைக் கொடு. இல்லாவிட்டால் உன் தலை இருக்காது.
கோபால், என்னை மாட்டி விட்டேல்ல; உன் தலை இருக்கப் போவதில்லை.



கோபால் வேறொரு பானையைக் கொண்டு வந்தான்.
நல்லவேளை உடையவில்லை.
மகாராஜா, பானையில் உள்ள தண்ணீர் கொதிக்க வேண்டும்.
தண்ணீர் கொதிக்க, சூடு தாங்காத யானை, பானையை உடைத்துக் கொண்டு வெளியே வந்தது.
இன்னும் ஒரு வாய்ப்பு உனக்குத் தரேன். அதுவும் உடைந்தால் நீ தலையை இழப்பது நிச்சயம்.
சரிங்க ராஜா.
நான் ஏதாவது செய்யணுமே!
தாமுவுக்கு ஒரு யோசனை தோன்றியது.
மகாராஜா நான் வீட்டிற்கு யானையைக் கொண்டு செல்கிறேன். என் மனைவியும் உதவுவாள்.
சரி கிளம்பு.
தாமு வீட்டில் –
மூளையே இல்லாத ராஜா. யாரால்தான் யானையை வெள்ளை யாக்க முடியும்?
அன்று இரவு –
யானைக்குச் சுண்ணாம்பு அடித்து விட வேண்டியதுதான்.


மறுநாள் காலை —
ஹா...ஹா... யானையை வெள்ளையாக்கி விட் டாய். சபாஷ்!
என் தலை தப்பிவிடும்.
இந்தப் பொன் முடிப்பை வைத்துக் கொள்.
கடவுளே! இன்னிக்கு மழை வரக் கூடாது.
அரசர் யானையை அருகில் சென்று பார்க்கவில்லை.
தாமு இந்தக் குதிரையையும் எடுத்துக் கொள்.
சரியான முட்டாள்!
இந்தக் குதிரையில் ஏறிப் பக்கத்து நாட்டுக்குப் போய்விட வேண்டியதுதான்.
தாமு, உன்னை மாட்டிவிட்டு, நானும் மாட்டிக் கொண்டேன். எப்படியோ தப்பிவிட்டாய்.
நான் இன்னும் முழுவதும் தப்பவில்லை.
வரேன் கோபால். பொழுது விடிவதற்குள் பக்கத்து நாட்டுக்குப் போய்ச் சேரணும்.
பரிசை வாங்கிட்டு ஏன் இவன் நாட்டை விட்டுப் போறான்?

பன்றி அழுக்கான பிராணியா?

எஸ். சுஜாதா

'குர்குர்' என்று சத்தத்தை எழுப்பிக் கொண்டு, தலையைக் குனிந்தபடி




கூட்டமாக நடந்து செல்லும் பன்றிகளைப் பார்த்திருப்பீர்கள்.

பன்றி என்ற பெயரைக் கேட்டதும் அருவறுப்பு தோன்றும். சாக்கடையில் புரண்டு, குப்பையில் மேயும் காட்சிதான் நினைவுக்கு வரும்.

நாம் நினைப்பது 'போல் பன்றி அசுத்தமான பிராணி அல்ல. நம் நாட்டில் பன்றிகள் சுத்தமாக வளரக் கூடிய சூழல் இல்லை. வெளிநாடுகளில் ஆடு, மாடுகளைப் போல் பறியும் பண்ணை விலங்காக வளர்க்கப்படுகின்றது.

இவை பாலூட்டும் இரட்டைக் குளம்பிகள் பிரிவைச் சேர்ந்தவை. உடல் பருத்து காணப்படும். கால்கள் குட்டையானவை. சிறிய வால் உண்டு. தலையின் முன்புறம் குவிந்து காணப்படும். இதில் மூக்குத் துளைகள் உள்ளன. குவிந்துள்ள இந்தப் பகுதி உணர்ச்சி மிக்கது. உறுதி வாய்ந்தது. எனவேதான் பன்றி தரைக்கு அருகில் குனிந்தபடி செல்கிறது. அதேபோல் குவிந்துள்ள பகுதியைக் கொண்டு மண்ணைத் தோண்டி கிழங்கு, வேர்களைப் பிடுங்கிச் சாப்பிடும்.



பருத்த உடல்; குட்டையான கால்களுடையதால் மற்ற பிராணிகளைப் போல் பன்றியால் வேகமாக ஓட இயலாது.

நாவில் அதிக எண்ணிக்கையிலான சுவை அரும்புகள் உள்ளன. இதனால் எந்தப் பொருளையும் விரும்பி உண்ணும். ஆண் பன்றிக்குக் கோரைப் பற்கள் வெளியில் நீட்டிக் கொண்டிருக்கும்.

தோல் தடிப்பானது. வியர்வைச் சுரப்பிகளும் கிடையாது. எனவே உடலின் வெப்பத்தைக் குறைப்பதற்காகச் சாக்கடையில் புரண்டு எழுகின்றன. ஈரம் காய்ந்ததும் மீண்டும் மீண்டும் சேற்றைப் பூசி உடலைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்கின்றன. பன்றி



களை வசதியாக வைத்திருந்தால் தண்ணீருக்குள் எருமைகளைப் போல் அமிழ்ந்திருந்து சூட்டைத் தணித்துக் கொள்ளும்.

நம் நாட்டில் பன்றிகளுக்கு விசேஷமான வசதி செய்து கொடுக்காததால்தான் இவை இப்படி அழுக்காக அலைகின்றன. இங்கு பொதுவாக சுற்றுப் புறத்தைத் தூய்மை செய்யவே பன்றி பயன்படுகிறது. பன்றி எதை வேண்டுமானாலும் சாப்பிடும். ஆனால் அளவாகவே உண்ணும். அசுத்தமானவற்றைச் சாப்பிடுவதால் பன்றிக்கு நோய் எதுவும் தாக்கிவிடாமல் இதன் உமிழ் நீர் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாக இருக்கிறது.

மேலை நாடுகளில் பன்றிகள் இறைச்சிக்காகவே வளர்க்கப்படுகின்றன. எனவே நல்ல நிலையில் சோளம், பார்லி, கம்பு, காய்கறி, வைட்டமின் மாத்திரைகள் கொடுத்து வளர்க்கப்படுகின்றன. பெண் பன்றி ஆறு மாதங்களுக்கு ஒரு முறை குட்டி போடும். கர்ப்ப காலம் 4 மாதங்கள். ஒரு தடவைக்கு 4 முதல் 12 குட்டிகள் வரை பிறக்கின்றன. குட்டி பிறக்கும் போதே கண்ணைத் திறந்து விடும். தோல் சிவப்பு மற்றும் சாம்பல் நிறமாகக் காட்சி தரும். முதுகில் வரி இருக்கும். வளர, வளர வரி மறைந்து விடும். குட்டி பிறந்து ஆறு மாதம் வரை தாயுடன் அலையும். ஒரு வருடத்தில் முதிர்ச்சியடைந்து விடும்.

பொதுவாகக் குழுக்களாகவே பன்றிகள் சுற்றித் திரிகின்றன.


பன்றி தோலிலிருந்து கால்பந்து, கையுறை போன்றவை செய்யப்படுகின்றன. உடம்பிலிருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பன்றி மனிதனின் அடிமையாகிவிட்டது.

சாலரேரியம்

உலகம் முழுவதும் உப்பும் மிளகும் இல்லாத சமையலறையே இருக்க முடியாது. மேலை நாட்டினர் வீடுகளில் மிளகாய் அறவே இருக்காது. அவர்கள் காரத்திற்கு மிளகையே சேர்க்கிறார்கள்.

மிளகுத் தூளும் உப்புத் தூளும் மேலை நாட்டில் ஒவ்வொரு சாப்பாட்டு மேஜையிலும் சிறு சிறு குப்பிகளில் அருகருகே உட்கார்ந்திருக்கும். இந்த இரண்டும் 'உடலுக்கு' அவசியமான பொருள்கள். மிளகு விஷங்களை முறிப்பதுடன் மனித ரத்தத்தையும் சுத்திகரிக்கிறது. உப்போ உயிர் காக்கிறது. உப்புதான் உணவில் இன்றியமையாத பொருள் என்பது ரொம்பப் பேருக்குத் தெரியாது. உப்பு மட்டும் இல்லையேல் மனிதன் 'வயிற்றெழிவு' ஏற்பட்டு இறந்து போக நேரிடும். மரங்களும் செடிகொடிகளும் கூட மண்ணிலிருந்து உறிஞ்சும் நீர் மூலம் தங்களுக்குத் தேவையான உப்பைப் பெறுகின்றன.



காற்றும் தண்ணீரும் போல உப்பு உயிர் வாழும் எல்லாவற்றிற்கும் இன்றியமையாத பொருள். அதை 'காமன்ஸால்ட்' என்கிறார்கள். காமன்ஸால்ட் என்பது சோடியம் குளோரைடுதான்.

இந்த முக்கியமான தாதுப் பொருளில் இரண்டு கூறுகள் இருக்கின்றன. அதிலுள்ள சோடியம் தண்ணீரில் இட்டால் எரியக் கூடிய இயல்புடையது. இன்னொரு கூறு குளோரைட். இது வாயு ரூபமானது. மிருகங்கள் செடி கொடிகள் இரண்டுக்கும் இவை அவசியமானது. இந்த இரண்டும் சேர்ந்துதான் உப்பாகிறது.

உப்பு பார்வைக்கு ரொம்பச் சாதாரண சின்னப் பொருள்தான். ஆனால் அதன் காரணமாக பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் கூட சாய்ந்திருக்கின்றன. இந்தியாவிலே காந்தி அடிகளின் ஒரு பிடி உப்புதான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அஸ்தமனத்திற்கே ஆதாரமாக அமைந்தது.

ரோமானியர் காலத்தில் உப்பு 'ஸ்டாக்' குறைவு ஏற்பட்டதால் அன்றைய ரோமானிய பிரதேசத்தில் பெரிய கொந்தளிப்பே ஏற்பட்டது. அதை அடக்க இரும்புக் கைகள் தோன்றின. சுதந்திரத்திற்கே உப்பு குறைவு வேட்டு வைத்தது.




• உப்பளம்




பழைய ரோமானிய ராஜ்ஜியத்தில் ஒவ்வொரு ரோமானிய வீரனுக்கும் ஒரு 'உப்பு ரேஷன்' கொடுக்கப்பட்டு வந்தது.

அதை 'சாலரேரியம்' என்று அழைத்தார்கள். கொடுக்கப்பட்ட உப்பு அந்த சோல்ஜருக்குத் தங்கத்தைவிட மதிப்பு மிக்கதாகத் தோன்றியது. இப்படி உப்பு கொடுத்தது பிற்காலத்தில் பணமாகக் கொடுக்கப்பட்ட போதும் அதே பழைய பெயரான சாலரேரியம் அதற்கும் தொடர்ந்தது. இன்றும் சம்பளத்தை 'சாலரி' என்றுதான் சொல்கிறோம். சாலரேரியம் என்பது லத்தீன் வார்த்தை. அதற்கு உப்பு என்று பொருள்.

ஃபிரான்ஸில் உப்பு பற்றாக்குறை நிலவிய காலத்திலேயே பிரெஞ்சுப் புரட்சி தோன்றியது. ஜீவாதாரமான உப்பை பிரெஞ்சு அரசியல்வாதிகள் 'மக்களைச் சுரண்ட' பயன்படுத்திக் கொண்டார்கள். உப்புக்கு வரி விதித்தார்கள். 'ஸால்ட் டாக்ஸ்' என்று ஒன்று போடப்பட்டு மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது. 'உப்புக்குக் கூடவா வரி?' என்று மக்கள் பொருமினார்கள்.



அந்த ஆத்திரமே பின்னால் வந்த பெரும் புரட்சிக்கு வித்திட்டது. இந்தியாவிலும் பிரிட்டிஷார் உப்பு வரி விதித்தார்கள். அதன் பலனை அனுபவித்தார்கள்.



• உப்புத் தொழிற்சாலை

என்னமோ 'சாப்பாட்டு பொருள்' என்றுதான் ரொம்பப் பேர் நினைக்கிறார்கள். இன்றைய வாழ்க்கையில் நம் முன் எதிர்படும் ஒவ்வொரு பொருளின் உற்பத்தியிலும் பின்னணியில் உப்பு இருக்கிறது. பதினாலாயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்களில் உப்பு தேவைப்படுகிறது. கிட்டத்தட்ட ஒவ்வொரு ரசாயன பண்டமும் தோன்ற அது அவசியமாகிறது. இரும்பு, கண்ணாடிகள், தோல் பொருட்கள், பிளாஸ்டிக்குகள், மருந்துகள் ஏன் இப்போது வீடுகளில் இருக்கும் கலர் டெலிவிஷன் உற்பத்தியிலும் உப்பு பங்கு பெற்றிருக்கிறது.

அமெரிக்காவில் வெறும் உப்பினாலேயே அமைக்கப்பட்ட ஒரு சாலை நியூயார்க்கில் இருக்கிறது. பல ஆண்டுகளாகியும் அது நல்ல நிலையில் மனித குலத்திற்குச் சேவை புரிந்து வருகிறது.

உணவுப் பண்டங்களைப் பதப்படுத்தி வைக்க உப்பு தேவைப்படுகிறது. இன்றைய உலக உப்பு உற்பத்தியில் ஐந்தில் ஒருபங்கு, உணவை சமைக்கவும் காக்கவுமே செலவிடப்படுகிறது.

இயற்கை, மனித குலத்திற்குக் காற்றையும் தண்ணீரையும் கொடுக்கும்போதே உப்பையும் ஏராளமாகக் கொடுத்து விட்டது.

ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் மனித குலத்திற்குத் தேவைப்படும் உப்பைப் போல, நூறு மில்லியன் மடங்கு அதிகமான உப்பை, இயற்கை அன்னை பிரம்மாண்டமான உலகக் கடல்களிலேயே 'டெபாசிட்' செய்து வைத்திருக்கிறாள்.

— தேனி முருகேசன்


ஒரு காகமும் பகல் பொழுதும்

பல ஆண்டுகளுக்கு முன்பு உலகம் தோன்றிய காலத்தில் எஸ்கிமோக்கள் வாழ்ந்து வரும் பகுதியில் பகல் என்பதே இல்லாமல் இருந்தது. வெறும் இரவுதான். சீல் என்ற பிராணியின் கொழுப்பிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் மூலம் எரிய விடப்படும் விளக்கொளியில்தான் மக்கள் வாழ்க்கை நடத்தி வந்தனர். எப்போது விழித்தெழ வேண்டும், எப்போது படுக்கப் போக வேண்டும் என்பது கூட தெரியாமல் இருந்தனர். அங்குள்ள மக்களில் பாதிப் பேர் தூங்க முயற்சிக்கும்போது மற்றவர்கள் சத்தம் போட்டபடி வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். இதனால் அடிக்கடி அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் எழுந்தன.

அதேசமயத்தில் அங்குள்ள கிராமமொன்றில் புத்திசாலி காகமொன்று வசித்து வந்தது. எல்லாருக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுக்கத் தெரிந்த அந்தக் காகத்திற்குப் பேசவும் தெரிந்திருந்தது. சில நேரங்களில் விளக்கொளியில் சுற்றிலும் அமர்ந்திருக்கும் எஸ்கிமோக்கள் கூட்டத்தில் இந்தக் காகமும் வந்து கலந்து கொள்ளும். தான் பறந்து சென்று பார்த்த மற்ற நாடுகளைப் பற்றியும் அதிசயங்களைப் பற்றியும் கதை கதையாகச் சொல்லும். ஒரு நாள் தான் பார்த்த பகல் பொழுதைப் பற்றி விவரித்தது.

"பகல் பொழுதா? அப்படியென்றால் என்ன?" என்று கேட்டனர் எஸ்கிமோக்கள்.

"பகல் பொழுதென்றால் சுற்றிலுமுள்ள எல்லா பொருள்களையும் சுலபமாகப் பார்க்கலாம். மிருகங்கள் வருவதையெல்லாம் பார்க்கலாம்" என்றது காகம். பகல் என்பது பெரும் சத்



தத்துடன் கூடிய ஒரு பயங்கரமான பொருளாகத்தான் இருக்குமென்று நினைத்த எஸ்கிமோக்கள், "அப்படியொன்று நம்முடைய நிலத்திலும் இருந்தால் இந்தப் பனிப் பிரதேசக் கரடிகளின் தாக்குதல்களிலிருந்து நம்மால் தப்பிக்க முடியும் அல்லவா? அவற்றைச் சுலபமாக வேட்டையாட முடியுமல்லவா?" என்று பேசிக் கொண்டார்கள்.



அ. குமார்

''எப்படியாவது எங்களுக்கும் ஒரு பகலைக் கொண்டு வந்து கொடு'' என்று எல்லோரும் ஒரே குரலில் அந்தக் காகத்திடம் வேண்டினார்கள்.

முதலில் காகம் மறுத்தது. ''பகல் பொழுதுள்ள நிலத்தை அடைய வேண்டுமென்றால் நீண்ட தொலைவு போக வேண்டும். அப்படியே நான் அங்குபோய் சேர்ந்தாலும் எனக்கு ஒருவரும் எதுவும் தரமாட்டார்கள்'' என்றது. எஸ்கிமோக்களோ விடவில்லை. கெஞ்சினார்கள். 'எவ்வளவு நாட்களுக்குத்தான் இவர்களும் இந்த இருண்ட பிரதேசத்திலேயே வசித்துக் கொண்டிருப்பார்கள்?' என்று பரிதாபப்பட்ட காகம் கடைசியில் புறப்பட்டுச் செல்ல ஒப்புக் கொண்டது.

சாப்பிட்டு ஓய்வெடுத்த பிறகு கிழக்குத் திசையில் தெரிந்த வெளிச்சத்தைக் குறிப்பறிந்து அந்த திசையை நோக்கி கரிய வானத்தில் பறக்கத் தொடங்கியது. பல நாட்கள் பிரயாணத்திற்குப் பிறகு அடிவானத்தில் சிறு வெளிச்சம் தெரிவதைப் பார்த்தது. இன்னும் சிறிது தூரம் பறந்து பார்த்தபோது வெள்ளம் போல் வெளிச்சம் பரவியிருந்தது. மகிழ்ச்சியடைந்த காகம் ஓய்வுக்காக ஒரு மரக் கிளையின் மீது சென்றமர்ந்தது. சுற்றும் முற்றும் பார்த்தபோது அருகே ஒரு கிராமம் இருப்பதையும் அதன் மையப் பகுதியில் மிகப் பெரிய பனிவீடு ஒன்று இருப்பதையும் கண்டது. பகல் வெளிச்சத்தில் பிரகாசமாகத் தெரிந்த அந்த வீடு கிராமத் தலைவனுடைய வீடாகும்.

காகம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. கிராமத் தலைவனின் அழகிய மகள் பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் தண்ணீர் எடுப்பதற்காக வீட்டிலிருந்து வெளியே வந்தாள். ஆறு பனிக்கட்டி போல் உறைந்திருந்தது. தண்ணீர் எடுப்பதற்கு வசதியாக ஒரு துவாரம் இருந்தது. அதற்குள்ளிருந்து தண்ணீர் எடுக்க, மிருகத் தோலினால் தயாரிக்கப்பட்ட வாளி ஒன்றை அவள் கொண்டு வந்திருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்திற்காகவே காத்திருந்த காகம் பறந்து சென்று பனிவீட்டின் கதவருகே அமர்ந்தது.

இறக்கைகளை சிலிர்க்கச்

செய்து தன் உடலை ஒரு சிறு தூசு பந்து போல் சுருட்டிக்கொண்டது. தண்ணீருடன் உள்ளே நுழைந்த பெண்ணின் உடையில் ஒட்டிக் கொண்டு உள்ளே போனது. வீட்டினுள் கதகதப்பாகவும் வெளிச்சமாகவும் இருந்தது. பனிக்கரடி தோலினால் தயாரிக்கப்பட்ட விரிப்பின் மீது விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் கிராமத் தலைவன். உள்ளே ஒளி உருண்டை விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. வால்ரஸ் என்ற கடல் வாழ் பிராணியின் தந்தங்களில் செய்யப்பட்ட நாய், நரி போன்ற பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது குழந்தை.

தண்ணீரை இறக்கிவைத்துவிட்டு வந்த அந்தப் பெண் குழந்தையைத் தூக்கும்போது தூசு போல் உருவம் கொண்டிருந்த காகம் அவளுடைய உடையிலிருந்து நழுவி குழந்தையின் காதுக்கருகில் போய் ஒட்டிக்கொண்டது. குழந்தை அழத் தொடங்கியது. குழந்தை ஏன் அழுகிறது என்று கேட்டான் தலைவன்.

''விளையாடுவதற்கு ஒரு ஒளி உருண்டை வேண்டுமென்று கேள்'' என்று குழந்தையின் காதில் மெல்ல கிசுகிசுத்தது தூசு உருண்டை.

குழந்தை கேட்பதைக் கொடுக்கும்படி தலைவன் உத்தரவிட, அவன் வேட்டையாடச் செல்லும்போது கொண்டு செல்லும் பைக்குள்ளிருந்து அழகிய வேலைப்பாடுடன் கூடிய பெட்டியொன்றை எடுத்து வைத்தாள் அந்தப் பெண். அந்தப் பெட்டியின் அழகில் சில விநாடிகள் மயங்கியிருந்தபோது, ஒளி விளக்கு வேண்டுமென்று மீண்டும் கேட்டு அழுதது குழந்தை. அந்தக் குழந்தை மீது தலைவனுக்கு மிகுந்த பாசமும் அன்பும் இருந்ததால் உடனடியாக எடுத்துத் தரும்படி உத்தரவிட்டான். பெட்டிக்குள் இருந்த ஒளி விளக்குகளில் ஒன்றை எடுத்துக்கொடுத்தாள் அந்தப் பெண்.

பளபளவென்றிருந்த அந்த விளக்கை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்த குழந்தையின் காதில் மீண்டும் கிசுகிசுத்தது தூசு. அதை ஒரு நூலில் கட்டித் தரச் சொல். கேட்டபடியே அந்த ஒளி விளக்கை நூலில் கட்டித்தர குழந்தை மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தது. தலைவனும் அந்தப் பெண்ணும் குழந்தை கூப்பிட்டால் கேட்பதற்கு வசதியாக கதவைத் திறந்து வைத்துவிட்டு வெளியே சென்றனர். இந்த வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காகம், குழந்தையின் காதில் மெல்ல சொல்லியது.- கதவுக்கருகில் போய் விளையாடு.''

குழந்தையும் கதவுக்கு வெளியே வந்து



விளையாடியது. ''ஒளிவிளக்கை எடுத்து காற்றில் சுழற்றி விளையாடு'' என்றது காகம். மீண்டும் குழந்தை காகம் சொல்லியபடி நூலைப் பிடித்துக்கொண்டு ஒளி விளக்கை சுழற்றியது. அதுவரை தூசு வடிவத்தில் இருந்த காகம் கீழே குதித்து பழையபடி காகமாக மாறியது. குழந்தை கையிலிருந்த ஒளிவிளக்கைக் கயிற்றுடன் காலில் பற்றிக் கொண்டு வானில் பறக்கத் தொடங்கியது.

தன்னுடைய கையிலிருந்ததைப் பறி கொடுத்த குழந்தை வீறிட்டு அழத் தொடங்கியது. குழந்தையின் அலறலைக் கேட்டுத் தலைவனும் அந்தப் பெண்ணும் ஓடி வந்தனர். கிராமம் முழுவதும் ஒன்று கூடியது. வேட்டைக்காரர்களின் வில்லிலிருந்து கிளம்பிய அம்புகள் அந்தக் காகத்தைக் கொல்ல முயற்சித்தன. ஆனால் காகத்தை அவற்றால் நெருங்க முடியவில்லை.

எஸ்கிமோக்கள் இருக்கும் திசை நோக்கி பறக்கத் தொடங்கிய காகத்தின் பின்னால் வெளிச்சம் சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. அதன் கால்களில் பற்றியிருந்த ஒளி உருண்டையின் சுழன்றாடும் வெளிச்சம் மட்டும் கீழே தெரிந்தது. எஸ்கிமோக்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்ததும் ஒளி உருண்டையைத் துண்டு துண்டாக உடைத்து ஒவ்வொரு கிராமத்திலும் இருந்த தன்னுடைய நண்பர்களின் வீடுகளின் மீது வீசியது. எல்லாருடைய வீடுகளிலும் ஒளிவெள்ளம் வீசத் தொடங்கியது. மகிழ்ச்சியடைந்த மக்கள் ஒன்று கூடி காகத்திற்கு நன்றி சொன்னார்கள். ''இன்னும் மிகப் பெரிய ஒளிவிளக்கு உருண்டையை நான் கொண்டு வந்திருந்தால் இங்கு சூழ்நிலையே மாறி விட்டிருக்கும். அங்கெல்லாம் பகல் இரவென்றும், வெயில் குளிர் காலமென்றும் இருக்கிறது. ஆனால் மிகப் பெரிய உருண்டையை என்னால் கொண்டுவர இயலவில்லை. நான் கொண்டுவந்த இந்தச் சிறு உருண்டை மூலம் உங்களுக்கெல்லாம் இனி ஆண்டு முழுவதும் பாதிக் காலம் பகலாகவும் மீதிக்காலம் இரவாகவும் தான் இருக்க முடியும்'' என்று சொல்லியது காகம்.



'இதுவே ஒரு ஆச்சரியம்தான்' என்று சொல்லி சந்தோஷப்பட்டனர் எஸ்கிமோக்கள். அன்றிலிருந்து காகத்திற்கு உண்மையான நண்பர்களாக இருந்ததோடு, காக்கைகளைக் கொல்வதில்லை என்ற உறுதியையும் எடுத்துக் கொண்டனர்.

கோகுலம்

போஸ்டர்





சென்னையில் பிறந்த இங்கிலாந்து கேப்டன்!

நாஸர் ஹூஸைன்

படம் : கே.வி.ஸ்ரீனிவாசன்

பிராயச்சித்தம் தேடிய வரதன்!

வரதன் தீவிர விஷ்ணு பக்தன். 'சி' என்ற எழுத்தைக்கூட மறந்தும் உச்சரிக்க மாட்டான். ருசியாக இருக்கிறது என்று அவன் சொன்னதே இல்லை. 'சுவையாக உள்ளது' என்பான். பசி வந்துவிட்டது என்பதற்குப் பதிலாக 'சாப்பிடும் நேரம் வந்துவிட்டதே' என்பான். 'சிவப்பு' என்று சொல்லாமல் 'இரத்த நிறம்' என்பான். பேச்சில்கூட அத்தனை கவனம். அவனது துணிகளை வெளுப்பவன், நாவிதன் எல்லோரும் திருமால் பக்தர்களே! சிவனைப் பற்றிப் பேசவே மாட்டார்கள்.

ஒரு நாள் காவிரியில் குளிக்கும்போது கையில் ஏதோ தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்தால் ருத்ராட்சம்! தேள் கொட்டினாற்போல் கையை உதறினான். ஆச்சாரியாரிடம் சென்று இதற்குப் பிராயசித்தம் கேட்டான்.

அவர் வரதனைச் சமாதானப்படுத்தி பூரி ஜெகன்னாத் சென்று வரப் பணித்தார். அந்தக் காலத்தில் இரண்டு சக்கர, மூன்று, நான்கு சக்கர வாகனங்களெல்லாம் கிடையாது. செல்வந்தர்களுக்குச் சாரட் வண்டி. சாதாரணமானவர்களுக்கு மாட்டு வண்டி. வரதனைப் போன்ற ஏழைகளுக்குக் கால்தான் வண்டி.

மாற்றுத் துணிகளும், கொஞ்சம் பணமும் சேர்த்துக் கொண்டு நடந்தான். இருட்டிவிட்டது. தங்குவதற்கு இடம் கிடைக்குமா என்று ஆராய்ந்தான். தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அதற்குள் மழையும் வரவே வரதன் தொப்பலாக நனைந்து போனான். குடிசைத் திண்ணையில் ஏறி நனைந்த வேஷ்டியைப் பிழிந்தான். அப்போது விளக்குப் பிறையில் கை பட்டது. கையில் ஒரு கொட்டைப் பாக்கு உரசியது. இருமல் வரும் போலிருக்கவே அதை எடுத்து வாயில் அடக்கிக் கொண்டான்.

மழை நின்றது. மின்னலில் சூளை போடப்பட்டிருந்ததைப் பார்த்தான் வரதன். பானையின் மேல் போட்டால் சூட்டில் வேஷ்டி சீக்கிரம் காயுமே என்று செயல்பட்ட வரதன் பானை உருளுமென்று எதிர் பார்க்க



வில்லை.

சத்தம் கேட்டு கதவைத் திறந்து கொண்டு குயவனும் அவன் மனைவியும் குடிசையிலிருந்து வெளியே வந்தனர். இருவரும் கள்ளம் கபடம் இல்லாதவர்கள்.

"சாமி! நீங்க யாரு? ஏன் பானையை உருட்டறீங்க?'' என்று கேட்டான் குயவன்.

''என் பெயர் வரதன். பூரி ஜெகந்நாத் புறப்பட்டேன். மழையில் வேஷ்டி நனைந்து விட்டது. பிழிந்து பானைமேல் காய வைத்தேன். பானை உருண்டு உங்களை இங்கே வரவழைத்தது'' என்றான் வரதன்.

வரதன் வாயில் பாக்கு இருந்ததால் பேச்சுத் தடுமாறியது. "வாயிலே என்ன?" என்று கேட்டான் குயவன். "இங்கே பிறையில் ஒரு பாக்கு இருந்தது. இருமலுக்கு எடுத்து அடக்கிக் கொண்டேன்'' என்றான்.

"அடியே! எத்தனை இடத்தில் தேடினேன். சாஸ்திரிகள் பானை வேணுமின்னு வந்தப்ப பேச இடைஞ்சலா இருக்குமின்னு பிறையிலே வைச்சது இப்பத்தான் ஞாபகம் வருது" என்று குயவன் ஆனந்தப் பட,


"ஐயா! அதைத் துண்டாக்கியாச்சா?" என்று கேட்டாள் அவன் மனைவி.


"அப்பவே துண்டாகிவிட்டதே" என்றான் வரதன். அவள் கணவனிடம், ''உனக்கு வயசாகிப் போச்சு! உன் பல்லைவிட ஐயா பல் கெட்டி'' என்றாள்.

"மதியம் பூரா நான் ஊற வைச்சிட்டிருந்ததால்தான் ஐயாவாலே துண்டாக்க முடிஞ்சது. புதுப்பாக்கைக் கொடுத்து துண்டாக்கச் சொல்லு பார்ப்போம்" என்றான் குயவன்.

வரதனுக்கு அவமானமாயிருந்தது. ருத்ராட்சம் கையில் பட்டதென்று பிராயச்சித்தம் செய்ய வந்தால் குயவனின் எச்சில் பாக்கை மென்றிருக்கிறோமே என்று விழித்தான்.

- மாலதி





நீலத் திமிங்கலம்

பூமியில் வாழும் மிருகங்களிலேயே பெரியது கடலில் வாழும் புளுவேல் எனப்படும் நீலத் திமிங்கலம்தான். இது இருபது யானைகளின் எடை கொண்டது. இதன் குடலில் இரண்டரை டன் உணவினை அடைக்கலாம். இதன் இரத்தக் குழாய்களில் சிறுகுழந்தைகள் ஊர்ந்து செல்லலாம்.


நீலத் திமிங்கலத்தின் குட்டிகூட 3000 கி எடை கொண்டது. 'கிரில்' என்று சொல்லப்படும் இறால் போன்றவற்றை இது உட்கொள்கிறது.

- எஸ்.மோகன்ராஜ், சீர்காழி

19 ஆளப்பிறந்தவன்

கதை: ராஜி   படம்: லலிதா




சோமு, நேரமாகி விட்டது. நான் கிளம்பறேன்.
நண்பா, இருட்டும் நேரம் ஆகிவிட்டது. தனியாகவா போகிறாய்?
கவலைப்படாதே சோமு. என்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்கள்.
ஜாக்கிரதை. சீக்கிரம் கிளம்பு.
காட்டு வழியே ஜெயசிம்மன் வரும்போது வீரசிம்மன் ஆட்கள் வலை வீசிப் பிடித்தனர்.
வசமா மாட்டிட்டியா?



ஜெயசிம்மா, இந்தத் தடவை நீ தப்பவே முடியாது. இந்தப் பாழடைந்த அரண்மனையின் பக்கம் யாருமே வரமாட்டார்கள்.
இவனைக் கவனமாகக் கண்காணியுங்கள். தப்பவிட்டால் உங்கள் தலை தரையில் உருளும். வரேன்.
சிறிது நேரம் கழித்து -
அது என்ன வெளியில் ஏதோ சத்தம்?
அதுவா? திருவிழாவில் வேடிக்கைக் காட்டினானே அந்தக் கரடி வித்தைக்காரன் போகிறான்.


அவர்களின் பேச்சு ஜெயசிம்மனின் காதில் விழுந்தது. உடனே உதட்டைக் குவித்து ஒலி எழுப்பினாள்.
ஊளா
ஊளா.....
ஊளா..


கரடி உள்ளே புகுந்தது.
ஐயோ.... ஆ...
கரடி!
உயிர் தப்பி ஓடினர் காவலர்கள்...


கரடிக்காரா! இந்தப் பக்கமாக நீ வந்ததாலே நான் தப்பினேன். நாளை அரண்மனைக்கு வா. உனக்கும் உன் கரடிக்கும் பரிசும் விருந்தும் தர ஏற்பாடு செய்யறேன்.
தொடரும்

யானை வருகுது!



யானை வருகுது - அங்கே
யானை வருகுது;
யானை கழுத்தின் மணியினோசை
யிங்கே கேட்குது.

யானை நடக்குது - மெல்ல
யானை நடக்குது;
பானை வயிற்றைத் தூக்கிக்கொண்டு
யானை நடக்குது.

பட்டம் மினுக்குது - நெற்றிப்
பட்டம் மினுக்குது;
பட்டுப் போர்வை முதுகில்ஆடிப்
பளபளக்குது.

காதை ஆட்டுது - பெரிய
காதை ஆட்டுது;
வாதை செய்யும் ஈக்கள் விரட்டக்
காதை ஆட்டுது.


வாலைச் சுழற்றுது - குஞ்ச
வாலைச் சுழற்றுது;
காலைக் கடிக்கும் கொசுவையோட்ட
வாலைச் சுழற்றுது.

காலை மடக்குது - முன்னங்
காலை மடக்குது;
காலில் ஏறி முதுகில் அமரக்
காலை மடக்குது.

கையை நீட்டுது - தும்பிக்
கையை நீட்டுது;
கையில் வைத்த காசைப்பாகன்
கையில் சேர்க்குது.

ஆடி வருகுது - யானை
அசைந்து வருகுது;
ஓடிவரும் சிறுவர் கூட்டம்
உவகை கொள்ளுது.

— என். சுந்தரராமன்



எங்கள் ஊரில் நடந்தது!

என் தங்கை ஒரு நாள் காலை ரொம்பவும் அடம் பிடித்து அழுது கொண்டிருந்தாள். என் அத்தையிடம் அவளுக்குப் பயம் அதிகம். அத்தை வீடு அடுத்த தெருவில் உள்ளது. என் அப்பா தங்கையை எவ்வளவோ சமாதானம் செய்து பார்த்தார். ஆனால் அவள் கேட்பதாயில்லை. கோபமடைந்த என் அப்பா அவளைத் தூக்கிக் கொண்டு, ''வா அத்தைகிட்டே கொண்டு போய் விட்டுடறேன். மயிலே, மயிலேன்னா இறகு போடமாட்டே'' என்றவாறு கிளம்பினர். உடனே என் தங்கை, ''வேண்டாம்பா, இறகு போடறேன்'' என்றாளே பார்க்கலாம்! நாங்கள் அனைவரும் சிரித்துவிட்டோம்.



- ப. அஷோக்,
பன்னிரண்டாம் வகுப்பு, பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை.


சரியாகுமா?

என் தம்பி மனோவுக்குக் காய்ச்சல் அடித்ததால் மருத்துவமனைக்குச் சென்றோம். அவனுக்கு ஊசி என்றால் பயம். எனவே டாக்டரிடம், ''டாக்டர்! ஊசி போடாமலே காய்ச்சல் சரியாகி விடுமா?'' என்று கேட்டார் என் அப்பா. டாக்டர், ''எனக்கு என்னமோ சரியாகும்னு தோணலை. ஊசி போட்டால் தான் சரியாகும்'' என்றார். அதைக் கேட்ட என் தங்கை, ''உங்களுக்குச் சரியாகுமானு கேக்கலை. மனோவுக்குச் சரியாகுமானுதான் கேட்டோம்'' என்றாள். இதைக் கேட்டவுடன் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்ததில் தம்பிக்குப் பாதி காய்ச்சல் சரியாகிவிட்டது.

- எம். வினோத், விருத்தாசலம்

முதலில்...

எங்கள் பள்ளியில் வகுப்புகள் ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும். பத்தாம் வகுப்பு மட்டும் எட்டரைக்கே இருக்க வேண்டும். எனவே நான் முதலில் கிளம்பி விடுவேன். ஒரு நாள் என் தங்கை ''தினமும் முதல்ல அக்காவுக்குத் தான் தலைசீவு நீங்க. எனக்கு முதல்ல சீவுங்க'' என்று அடம் செய்தாள். ''எனக்கு முதல்ல பின்னுங்கம்மா. அவளுக்கு முதல்ல பின்னினா எனக்கு லேட்டாயிடும். அப்புறம் எங்க மிஸ் அடி பின்னிடுவாங்க'' என்றேன். ''ஐ! மிஸ் பின்னிடுவாங்களா, அப்ப மிஸ்கிட்ட போய் பின்னிக்கோ'' என என் கையிலிருந்த சீப்பை தங்கை பிடுங்கிக் கொள்ள அம்மா சிரித்தார்.



- எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

கோடி

ஊரிலிருந்து மாமா

''நான் இறகு போடறேன்!''

குடும்பத்துடன் வந்திருந்தார். மாமா பையன் படு சுட்டி. அவனிடம், "உனக்கு மொத்தம் எத்தனை நண்பர்கள் இருக்கின்றனர்?" என்று கேட்டேன். "இரண்டு கோடி இருக்கின்றனர்" என்றான். நான் புரியாமல் விழித்தேன். அப்புறம் அவனே , "எனக்கு இரண்டு நண்பர்கள் இருக்கின்றனர்; ஒருவன் பெயர் தனுஷ்கோடி, இன்னொருவன் பெயர் புண்ணியகோடி" என்று கூறவும் அனைவரும் சிரித்து





விட்டோம்.

- சி. ராஜசேகரன்,
ராஜபாளையம்.

மலர்


எங்கள் வீட்டில் இந்த வருடம் வாங்கிய தீபாவளி மலர்களை (புத்தகங்களை) அப்பாவின் நண்பர் ஒருவர் படிப்பதற்காக இரவல் வாங்கிச் சென்றார். எப்போதும் சிறிதுகூட கசங்காமல் வாங்கியபடி திருப்பித் தரும் அவர் ஒரு புத்தகத்தை மட்டும் சற்றுக் கசங்கியபடி கொண்டு வந்தார். "ஏன் இப்படி?" என்று அம்மா கேட்க, "இதில் தாள் சுமாராகதான் இருக்குது அதனாலதான்" என்று உள்ளது உள்ளபடியே கூறினார். உடனே நான் குறுக்கிட்டு " 'மலர்'னா கசங்கத்தான் செய்யும். சில மலர்கள் உடனேயும், சில மலர்கள் தாமதமாகவும் கசங்குவதுபோல இது மட்டும் உடனே கசங்கியுள்ளது" என்று கூறியதைக் கேட்டு கோபமடைய இருந்த அம்மாவின் முகமும், வெளிறிப்போன அப்பாவின் நண்பர் முகமும் சகஜ நிலையை அடைந்தன.

- த. வரதராஜன், அம்மையப்பன்

கைகூப்பியபடி...

நவராத்திரி சமயம் வீட்டில் கொலு வைத்திருந்தோம். நாங்கள் பலரது வீட்டிற்குச் சென்றோம். பலரும் எங்கள் வீட்டிற்கும் வந்தனர். பக்கத்து வீட்டில் இருந்து துறுதுறுவென்ற சிறுமியும் அவள் பாட்டியும் வந்திருந்தனர். பாட்டி, "இவள் நன்றாகப் பாடுவாள்" என்றதும், அவள் கைகளைக் கூப்பிக் கொண்டு சில பக்திப் பாடல்களைப் பாடினாள். அருகிலிருந்த ஒரு மாமி, "இவள் சினிமாப் பாட்டுகூட பாடுவாள்" என்றார். நான், "எங்கே பாடு பார்ப்போம்?" என்றேன். பக்திப் பாடல்கள் பாட கூப்பிய கைகளை நீக்காமலேயே, "சிநேகிதனே, சிநேகிதனே..." எனப் பாடினாள். மாமி கைகளை எடுத்து விட்டார். மீண்டும் கைகளைக் கூப்பிக் கொண்டு அவள் சினிமாப் பாடலைத் தொடர அன்று முழுவதும் சிரித்தோம். அந்தப் பாடலை எப்போது கேட்டாலும் இந்த நிகழ்ச்சியே ஞாபகம் வருகிறது.





- ந. பூஷாவளி, சேலையூர்

12. சாதனை நாயகர்கள்

டாக்டர் பூவண்ணன்

மாணவர் வெள்ளம், அருள்மொழி மாட்டிக் கொண்ட பங்களாவை நோக்கிப் பாய்ந்தது எப்படி?

அறைக்குள்ளே அருள்மொழியை விட்டு விட்டு, அந்த முரடன் வெளிப்புறம் கதவைச் சாத்திக் கொண்டு போய்விட்டானல்லவா?

உள்ளேயிருந்த அருள்மொழி வெளியேற வழியிருக்கிறதா என்று பார்த்தான். கதவை இழுத்துப் பார்த்தான். திறக்க முடியவில்லை. அந்த அறையை ஆராய்ந்தான். அப்போது தான் அது ஏறத்தாழ ஒரு ஸ்டோர் ரூம் போல இருப்பதை அறிந்தான். எட்டாத உயரத்தில் சிறிய 'வெண்டிலேடர்' மட்டும் இருந்தது. உள்ளே சில தட்டுமுட்டுச் சாமான்கள் இருந்தன. ஒரு மூலையில் மூங்கில்கூடை. ஒரு மூலையிலிருந்த அதைத் தூக்கி இன்னொரு மூலையை நோக்கி வீசி எறிந்தான்.

கூடை தலைகீழாக அந்தரத்தில் பறந்தது. பறந்தபோதே அதன் மூடி கீழே விழ, உள்ளே இருந்த துணிகள் ஒவ்வொன்றாய் வரிசையாகக் கீழே விழுந்தது. ஒவ்வொன்றாகத் துணிகள் விழும்போது 'டக்'கென்று ஒரு ஓசை கேட்டதை அருள்மொழி கவனிக்கத் தவறவில்லை.

கீழே விழுந்த துணிகளை ஆராய்ந்தான். ஒரு பேண்ட்டில் ஏதோ திடப் பொருள் இருப்பதைக் கை உணர்ந்தது.

என்ன அது? கைக்கு அடக்கமான சின்னஞ்சிறிய செல்போன். அதை பேண்ட்டில் வைத்த ஆசாமி எடுக்க மறந்துவிட்டான்



போலும்.

அந்த போனைப் பார்த்ததும், மதுரவாயில் எஸ்.டி.டி. பூத் நினைவுக்கு வந்தது. அங்கே காலையில் நின்றபோது, பேருந்திலிருந்து இறங்கிய சாரண அணி நினைவுக்கு வந்தது.

அருள்மொழி தாராசுரத்திலிருந்தபோது ஒரு சாரணனாக இருந்தான். ஒரு சாரணனின் கடமை அவனுக்குத் தெரியும். சாரணன் எந்த நேரத்திலும் பிறருக்கு உதவத் தயாராக இருக்க வேண்டும். 'பி பிரிபேர்ட்' என்பது அவனது இலட்சிய முழக்கமல்லவா?

சாரணன் அருள்மொழி, 'மற்ற சாரணர்களைத் துணைக்கு அழைத்தால் என்ன? அவர்களை இதோ இந்த தொலைபேசி மூலம் அழைக்கலாமே.'

இப்படி நினைத்தவன்,



தன் சட்டைப் பையில் கைவிட்டு, எஸ்.டி.டி. பூத் உரிமையாளர் கண்ணன் கொடுத்த முகவரி அட்டையை எடுத்தான். செல் போனை எழுப்பி, அதில் கண்ணனின் எண்ணை அழுத்தினான். மறு நொடி, கண்ணன் குரல் கேட்டது.

"நமது நகரத்தின் மிகச் சிறந்த பள்ளி மாணவர்களைச் சிலர் கடத்திச் செல்கிறார்கள். ஏதோ தீய செயலுக்காகத்தான் இப்படி செய்கிறார்கள். கடத்தப்பட்ட மாணவர்களை மதுரவாயிலின் மேற்கே உள்ள கடைசி வீதியில் ஒரு கோட்டை போல உள்ள பங்களாவில் வைத்திருக்கிறார்கள். அங்கிருந்து அந்த மாணவர்களை மீட்க வேண்டும். சாரணர் முகாமுக்கு வந்த சாரணர்களின் துணையோடு மீட்க வேண்டும். சாரணர் முகாம் இருக்கும் இடத்தில் தொலைபேசி இருக்கிறதா?"

கண்ணன் 'இருக்கிறது' என்று கூறி, எண்ணைக் கூறினார். அதை நினைவில் பதித்துக் கொண்ட அருள்மொழி, "நான் இப்போதே இந்த எண்ணைத் தொடர்பு கொண்டு, உதவி கேட்கிறேன். நீங்கள் இப்போதே புறப்பட்டுப் போய், எங்களைப் பற்றித் தெரிவித்து சாரணத் தலைவர் உதவுமாறு சிபாரிசு செய்ய வேண்டும். பிறகு போலீசுக்கும் தகவல் கொடுங்கள்" என்று முடித்தான்.

அரை நொடியில் கண்ணன், பூத்தை மூடிவிட்டு, தன் சைக்கிளில் சாரணர் முகாமை நாடிப் போனார்.

அருள்மொழி, சாரணர் முகாமின் தலைவரோடு பேசினான்.

"ஐயா, நான் ஒரு சாரணன்.. தயவு செய்து நான் கூறுவதை இடைமறிக்காமல் கேளுங்கள்" என்று கூறிய அருள்மொழி, தான் அப்போது இருக்கும் இடத்தையும் அங்கே வந்த விதத்தையும் வந்ததன் காரணத்தையும் விளக்கினான். "ஐயா, தாங்கள் சாரணர் படையோடு வந்து இந்த வீட்டைச் சூழ்ந்து யாரும் வெளியேறாமல் தடுக்க வேண்டும். போலீஸ் வரும் வரை தடுத்து நிறுத்த வேண்டும்" என்றான்.

அருள்மொழி அழுத்தம் திருத்தமாக ஆரம்பித்து அழும் குரலில் முடிக்க, "கடமை உணர்ந்த சாரணனே! இதோ புறப்பட்டு விட்டேன்! சாரணர் பெரும்படையுடன் வருகிறேன்" என்று சொன்னார் தலைவர்.

அடுத்து மாறன் வீட்டுக்குப் போன் செய்து, பல்லவியிடம் பேசினான். நடந்ததைக் கூறினான். இளங்கோவின் தந்தைக்கு போன் செய்து, "போலீஸ் மதுரவாயிலுக்கு வரும் வழியில் அப்படியே அண்ணா நகர் போலீசுக்கும் தகவல் கொடுங்கள்" என்றான்.

அதன் பிறகுதான் ஓய்ந்தான்.

சாரணர் பேரணி அருள்மொழி சிறைப்பட்ட பங்களாவை நோக்கிப் பாய்ந்ததும் அதைச் சுற்றி வளைத்ததும் அருள்மொழியின் அறிவுக் கூர்மையால்தான்.

வேனிலிருந்து இறங்கி ஓட முயன்ற முரடனைச் சாரண மாணவர் ஒரு ஐம்பது பேர் வளைத்துப் பிடித்தனர். சிலர், வேனிலிருந்த மாணவர்களை விடுவித்தனர். சிலர் வீட்டுக்குள் ஓடினர். அருள்மொழி கதவைத் தொடர்ந்து தட்ட, சிலர் அதைத் திறந்து அவனை விடுவித்தனர்.

இன்னும் சாரணர் வந்து கொண்டேயிருந்தனர்.



அருள்மொழி

முகாமின் தலைவர் வந்தார். கண்ணன் வந்தார். அவர் போன் செய்ததால், மதுரவாயில் போலீஸ் வந்தது.

சாரணர் தலைவர், அருள்மொழியை சந்தித்து அவனைப் பாராட்டினார்.

நேரம் செல்லச் செல்ல, ஊர் மக்களும் அங்கு வந்து சேர்ந்தனர். இளங்கோவின் தந்தையும் பல்லவியும் செய்த முயற்சியால், அமைந்தகரை, அண்ணா நகர் போலீஸாரும் வந்தனர். பல்லவியும் அங்கே வந்தாள். அதோடு பத்திரிகை நிருபர்களும் தொலைக் காட்சியினரும் அங்கே குழுமினர்.

அங்கேயே நிருபர்கள் பேட்டி கண்டார்கள். அருள்மொழியையும் அவனுடன் வந்த மாணவர் ஐவரையும் பேட்டி கண்டனர். எஸ்.டி.டி. பூத் கண்ணனையும், சாரணர் முகாம் தலைவரையும் பேட்டி கண்டனர்.

அதற்குள் போலீசார், மாணவர்களைக் கடத்திய முரடன் முதலியோரிடம் ஒரு 'மினி' விசாரணை செய்தனர்.

மும்பையில் வெளிநாடுகளுடன் தொடர்புடைய ஒரு கடத்தல் கும்பல் இருக்கிறது. அதற்காக ஒரு இரகசிய அலுவலகம் இருக்கிறது. அங்கே கணிப் பொறிகளை இயக்க, இணையத்தை இயக்க, ஈ.மெயில் முதலியவற்றைக் கவனிக்க கல்வித் திறமைமிக்க இளைஞர்கள், மாணவர்கள் தேவை. அதனால் புத்திசாலிகளான ஏழை மாணவர்களைக் கடத்துவது ஆபத்தில்லாதது என்பது அவர்தம் சித்தாந்தம். அதனால்தான் பூபதி - சுந்தரம் போன்றோர் கடத்தப்பட்டனர். இருபத்தைந்து பேர் அவர்கள் திட்டம். ஏறத்தாழ அவர்கள் திட்டம் முடியும் கட்டத்தில் நடேசன் தப்பினான். அதனால் அவன் நண்பர்களான மூவேந்தர்கள் அவர்களை மடக்கிவிட்டார்கள்.

தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் ஆகியவை, மூவேந்தர் அணியை - பல்லவியை, மிக அதிகமாகப் பாராட்டின.

மூவேந்தரின் பள்ளி அவர்களுக்கு அடுத்தவாரத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தியது.

பள்ளியின் விளையாட்டுத் திடலில் மேடையமைத்துப் பாராட்டுக் கூட்டம் நடத்தினர்.

கூட்டம் தொடங்கும் முன்பே பிரமுகர்கள், செல்வந்தர்கள், கல்வியாளர்கள் என்று மிகப் பலர், விழா நடக்கும் இடத்தில் கூடி விட்டனர். வந்தவர்கள் அனைவரும் மூவேந்தர்களையே முதலில் தேடிப் பாராட்டினர். அதனால் தலைமையாசிரியர் விழா நடக்கும் இடத்தின் முற்பகுதியில் மூவரையும் நிற்க வைத்தார். பல்லவியும் உடன் இருந்தாள்.



திடீரென்று ஒரு பரபரப்பு. பிரமுகர்கள் வரிசையில் ஒரு பெண்மணி, பழைய சேலை உடுத்தி, பரட்டைத் தலையைப் படியச் சீவி முடிந்து, "கண்ணுங்களா? நீங்க நல்லா இருக்கணும்!" என்று வாழ்த்திய போது, மூவேந்தர்கள் ஒரு கணம் இவர் யார் என்று தெரி

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	: Chennai
2. Periodicity of Publication	: Monthly
3. Name of Printer	: K. Rajendran
Nationality	: Indian
Address	: 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
4. Name of Publisher	: K. Rajendran
Nationality	: Indian
Address	: 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	: K. Rajendran
Nationality	: Indian
Address	: 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2002

K. Rajendran
Publisher

யாமல் விழித்தனர். அதற்குள் பல்லவி அந்தப் பெண்மணியின் அருகே வர, அவளை அன்போடு அணைத்துக் கொண்டாள். "ராஜாத்தி, நீ அன்னைக்கு அருள் வாக்கு சொன்னியே. பூபதி நிச்சயம் வருவான். தொடர்ந்து படிப்பான்னு சொன்னியே. அப்படியே அவன் வந்துட்டான்" என்ற பெண்மணி, "பூபதி..." என்றழைக்க, கூட்டத்தில் சற்று பின்தங்கிவிட்ட பூபதி முன்னே வந்தான். பூபதியின் தாய் நிறைந்த மனத்தோடு, பெருகிய கண்ணீரோடு மூவேந்தரையும் பல்லவியையும் வாழ்த்தினாள்.

சரியாக மாலை ஆறு மணிக்குப் பாராட்டுக் கூட்டம் தொடங்கியது.

மேடையில் சிங்காசனம்போல நான்கு நாற்காலிகளில் மூவேந்தரும் பல்லவியும் அமர்த்தப்பட்டனர். தலைமையாசிரியர், கல்வி அதிகாரி முதலிய பலர் அவர்களைப் பாராட்டினர்.

இறுதியாக, மூவேந்தர்களின் தமிழய்யா தமோதரனார் பாராட்ட வந்தார்.

அவர் பாராட்டும்போது, தான் முதல் முதலில் மூவேந்தரை வகுப்பில் கண்ட அந்த நாளை நினைவு கூர்ந்தார். "மாணவர்கள் சாதனை நாயகர்களாக வேண்டும் என்று சொன்னேன். இளங்கோவைச் சேரன் என்றும் அருள்மொழியைச் சோழன் என்றும், நெடுமாறனைப் பாண்டியன் என்றும் குறிப்பிட்டேன். நெடுமாறனைப் பாண்டியன் போல சங்கம் வைப்பாயா என்று கேட்டேன். அவன் மூவேந்தர் தமிழ்ச் சங்கம் தொடங்கி, அதன்மூலம் புத்தக வங்கி நடத்தி வெற்றி பெற்று விட்டான். அருள்மொழியிடம், நீ ராஜராஜனைப் போல வீரச் செயல் புரிவாயா என்று கேட்டேன். அவன் மாவீரன் போல எதிரியின் கோட்டைக்குள் புகுந்து இன்று வெற்றி பெற்றுவிட்டான். இளங்கோவிடம், நீ இளங்கோ அடிகளைப் போல ஒரு சிலப்பதிகாரம் செய்வாயா என்று கேட்டேன். செய்வதாய்ச் சொன்னான். அவன் என்ன செய்தான் என்பது புரியவில்லை..." என்று கூறி நிறுத்தி, திரும்பி இளங்கோவைப் பார்த்தார்.

இளங்கோ உடனே எழுந்து மேடையின் முன்னே வந்தான். "ஐயா, நானும் ஒரு செய்யுள் புத்தகம் எழுதியிருக்கிறேன்" என்று சொன்னபோது, தமிழ் ஐயா திகைத்து விட்டார். அவையோர் திகைத்து விட்டனர்.

இளங்கோ கூறியதுடன் அமராமல் தனது கால் சட்டைப் பையில் கைவிட்டு, அவன் கைக்குள் அடங்கிவிடும் ஒரு சிறிய புத்தகத்தை எடுத்தான். 'விசிட்டிங் கார்டு' அளவிலான ஒரு நூலைத் தமிழாசிரியரிடம் கொடுத்தான். பின்பு, "ஐயா, விசிட்டிங் கார்டு அளவிலான தாளில் இருநூறு பக்கங்களில் பொடி எழுத்தில் எழுதியிருக்கிறேன்" என்று சொன்னான்.

தமிழய்யா அதைப் புரட்டிப் பார்த்து மகிழ்ந்து போனார். "திருக்குறளைச் சிலர் இப்படி சிறு தாளில் எழுதிச் சாதனை செய்திருக்கிறார்கள். நீ புதிய செய்யுளை எழுதிச் சாதனை செய்துவிட்டாய். இதற்கு முன் இப்படி ஒரு பதிப்பை யாரும் தந்ததில்லை. இளங்கோ, நீயும் சொன்னபடி சாதனை செய்துவிட்டாய். இந்த மூன்று சாதனை நாயகர்களை நீடுழி வாழ வாழ்த்துகிறேன்."

தமிழய்யா மேடையில் நின்று வாழ்த்தினார். அரங்கிலும் வெளியிலும் சென்னையிலும் வெளியூரிலும் இந்தச் சாதனை நாயகர்களை லட்சோபலட்சம் மக்கள் வாழ்த்தினார்கள்.

(முற்றும்)

விடுகதைப் பக்கம்

I 1) கண்ணீரில் கரைந்தபடி கடைசி வரை ஒளி தருவான் — அவன் யார்?

2) குண்டு உடம்புக்காரர் கூட்டை சுமந்தபடி ஆறடிக்கு அரையடி ஆடாமல் அசையாமல் நடப்பார் — அவர் யார்?

3) உரசினால் போதும், உயிர் முடிந்து போகும் — அது என்ன?

4) தலைக்கு மேலே வளர்ந்தவனை வளைக்க முடியும்; ஒடிக்க முடியாது— அவன் யார்?

5) பறந்து வந்தவன் ஆடிய ஆட்டத்தில் பார்த்த கண்கள் பரவசம்— அவன் யார்?

6) வானுக்கும் பூமிக்கும் ஒரே கம்பி, வளம் கொழிக்க வைக்கும் கம்பி— அது என்ன?

7) எண்ணெயின்றி, திரியின்றி எரியும் விளக்கு, ஊருக்கெல்லாம் ஒரே விளக்கு — அது என்ன?

8) இங்கே ஒட்டியதை அங்கே பிரித்தார்கள் — அது என்ன?

9) காதுக்குத் தருவான் நூறுசேதி; சேதிக்குச் சொந்தக்காரன் அருகில் இல்லாமலே — அது என்ன?

— உ. சங்கர லிங்கம்,
எட்டாம் வகுப்பு 'ஏ' பிரிவு
புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி,
செங்கல்பட்டு - 2

II 1) கோடி கோடியா வெள்ளிப் பணம் கொட்டி கிடக்குது வீதியிலே — அது என்ன?

2) இரவெல்லாம் பூந்தோட்டம் விடிந்த பின்பு வெறுந்தோட்டம் — அது என்ன?

3) சோளப் பொரி பெருஞ் சுளகில் வைத்தேன் விடிஞ்சால் வெறுஞ் சுளகு — அது என்ன?

4) மனிதன் போடாத பந்தலிலே இறைஞ்சி கிடக்குது மல்லிகைப்பூ — அது என்ன?

— சு. சௌம்யாயனி,
எட்டாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.



III 1) தாய் குப்பையிலே, மகள் சந்தையிலே — அது என்ன?

2) அம்மா சப்பை, மகள் உருண்டை — அது என்ன?

3) இந்த ஒட்டம் நின்றால் எந்த ஆட்டமும் இல்லை — அது என்ன?

4) கறுப்புக் குதிரையை அம்மா குளிப்பாட்ட வெள்ளையாச்சு — அது என்ன?


— சு. விக்னேஷ்
ஒன்பதாம் வகுப்பு,
எஸ். ஏ. வி. மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.

விடைகள்:

I 1) மெழுகுவர்த்தி 2) ஆமை 3) தீக்குச்சி 4) தலைமுடி 5) மயில் 6) மழை 7) நிலா 8) கடிதம் 9) தொலைபேசி

II ஒரே விடை : ஆகாயம், நட்சத்திரம்

III 1) வைக்கோல், நெல், 2) அம்மி, குழவி, 3) இரத்த ஓட்டம், 4) உளுந்து.



எதற்கும் பின்வாங்கக் கூடாது!

எங்கள் வகுப்பாசிரியர், "எந்த விஷயத்திலும் பின் வாங்கவே கூடாது" என்று கூறிக் கொண்டிருந்தார். மறுநாள் நடைபெறும் பள்ளி ஆண்டு விழாவுக்கு மாணவர்கள் அனைவருக்கும் பேட்ஜை சட்டையில் குத்திக் கொள்ள உதவியாளர் வந்து வகுப்பாசிரியரிடம் மொத்தமாகக் கொடுத்தார். அப்போது ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து "நாளைக்கு இந்த பேட்ஜை சட்டையில் குத்துவதற்குப் பின் வாங்க வேண்டியதிருக்குமே!" என்று சொல்ல வகுப்பறையே சிரிப்பலையில் மூழ்கியது.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்

இடம் மாறி...

கணித வகுப்பு முடிந்து தமிழ் வகுப்புக்குத் தமிழாசிரியை வர சற்றுத் தாமதமானது. அதற்குள் என் அருகில் இருந்தவள் கடைசி இருக்கையில் இருக்கும் தன் தோழியிடம் சென்று கதை பேசத் தொடங்கினாள். திடீரென தமிழாசிரியை வகுப்புக்குள் நுழைந்ததால் அவளால் திரும்ப தன்னிடத்திற்கு வர முடியவில்லை. சிறிது நேரம் இலக்கணம் நடத்திய தமிழாசிரியை அவள் பின்னால் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து, "ஏன் இடம் மாறி உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார். உடனே, அவள், "இது இடம் மாறு தோற்ற பிழை" என்று சொன்னதும் தமிழாசிரியை சிரித்து விட்டு, "சரி, முன்



னால் வந்து உட்கார்" என்று சொன்னார்.

- சு. சௌம்யாயனி, எட்டாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி.

எழுதியது யார்?

எங்கள் வகுப்பறையில் ஏதாவது ஒரு திருக்குறளை கரும்பலகையின் ஓரத்தில் எழுதி வைப்போம். எங்கள் வகுப்பறைக்கு வந்த தமிழாசிரியர், அன்றைய திருக்குறளைப் பார்த்துவிட்டு "இந்தத் திருக்குறளை எழுதியது யார்?" என்றார். நாங்கள் அனைவரும் 'வள்ளுவர்' என்று கோரஸ் பாடினோம். அவரோ "நான் அதைக் கேட்கவில்லை. கரும்பலகையில் தப்பும் தவறுமாய் எழுதியது யார்?" என்று கேட்டார். எழுதியவன் திருதிருவென



முழித்தபடி எழுந்து நின்றான்.

- ர. யாழினி, ஏழாம் வகுப்பு,
ஸ்ரீசேதுமாணிக்கம் உயர் நிலைப் பள்ளி, மேலச்சீத்தை

எதைக் குடிப்பது?

ஒரு நாள் எங்கள் தமிழாசிரியர் பாடத்தை முடிக்க வேண்டும் என்பதற்காக ஸ்பெஷல் கிளாஸ் வைத்தார். அப்போது செய்யுள் நடத்திக் கொண்டிருந்தார். அதைக் கவனிக்காமல் செல்வக்குமார் என்ற மாணவன் தூங்கிக் கொண்டிருந் தான். அவனை எழுப்பி, "காலையில் என்ன சாப்பிட்டாய்?" என்று கேட்டார். அதற்கு அவன், "கூழ் குடித்துவிட்டு வந்தேன்" என்றான். உடனே ஆசிரியர், "கூழானாலும் குளித்துக் குடி என்று பழமொழி இருக் கிறது. குளிக்காததால் தூங்கிவிட்டாயா?" என்றார். உடனே அவன், "கூழில் எப்படி சார் குளிக்கிறது? பிசுபிசுன்னு ஒட்டாதா? அப்படியே கூழில் குளித்து விட்டால் பிறகு எதைத்தான் குடிக்கிறது?" என்று கேட டான். உடனே வகுப்பே சிரித்தது. பிறகு அவன் மன்னிப்பு கேட்டு விட்டுப் பாடத் தைக் கவனிக்க ஆரம்பித்தான்.

- எம்.வினோத், விருத்தாசலம்.

பயன்?

மின் சாதனங்களைப் பற்றி அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது, "ஃப்ரிட்ஜ் எதற்குப் பயன்படு கிறது?" என்று கேட்டார். அப்போது ஒரு மாணவன் எழுந்து, "சாலைகளின் குறுக்கே ஓடும் ஆறுகளைக் கடக்க உதவுகிறது" என்றான். அனைவரும் சிரித்துவிட்டோம். ஆசிரியர் கேட்டதோ, குளிர்சாதனப் பெட்டி யைப் பற்றி. அம்மாணவன் கூறியதோ பாலத்தைப் பற்றி. ஆசிரியர் அவனிடம் விளக்கியதும் அவனும் சிரித்துவிட்டான்.

- பேச்சி, விருதுநகர்

நோட்டு...

நான் மூன்றாம் வகுப்புப் படிக்கிறேன். எங்கள் வகுப்பாசிரியை எங்களுக்கு, ஆங்கிலமும், கணக்கும் எடுக்கிறார். முதல் பாடவேளை ஆரம்பித்ததும், இங்கிலீஷ் ஹோம் ஒர்க் நோட்டுகளைப் பார்வையிடு வார். நாலாவது பீரியடில் கணித ஹோம்



ஒர்க் நோட்டுகளைப் பார்ப்பார். ஒரு நாள், முதல் பாடவேளை இங்கிலீஷ் ஹோம் ஒர்க்கைப் பார்த்துவந்த ஆசிரியை ஒரு மாணவியிடம் வந்ததும் "நோட்டு எங்கே?" என்றார். அதற்கு அம்மாணவி, "அதைக் கணக்கு நோட்டோடு சேர்த்து வீட்ல வச் சிட்டு வந்திட்டேன் டீச்சர்!" என்றாள் அமை தியாக. டீச்சர் கோபமாக, "ஓகோ! இங்கிலீஷ் நோட்டோடு கணக்கு நோட்டும் இல்லேங் கறதைச் சாமர்த்தியமா சொல்றியா? போ, கடைசி பெஞ்ச் மேலே ஏறி நில்லு!" என்று கூறினார். பாவம் அந்த மாணவி, நின்ற படியே பாடத்தைக் கவனித்தாள்.

- டி. யாழினி, 3ஆம் வகுப்பு ஆ பிரிவு, மஹரிஷி வித்யாமந்திர் மெட்ரிக் பள்ளி, திருவண்ணாமலை.





நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

1897 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ஆம் தேதி வங்காளத்தில் உள்ள 'கட்டாக்' என்ற சிற்றூரில், வழக்கறிஞரான ஜானகி நாத்துக்கும், பிரபாவதி அம்மையாருக்கும் இரண்டாம் குழந்தையாகப் பிறந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

குழந்தை இளமையிலேயே துறுதுறுவென இருந்தது. எதையும் நன்றாக உற்று நோக்கி வந்தது. ஏன் என்று கேள்விகளைக் கேட்டது. ஒன்றைச் சொன்னால் அதை மறக்காமல் நினைவில் வைத்திருந்தது. இந்தக் குழந்தை எதிர்காலத்தில் மிகப் பெரிய அறிவாளியாக வரலாம் எனப் பெற்றோர் எதிர்பார்த்திருந்தனர்.

சுபாஷுக்கு உரிய பருவம் வந்ததும் அவரை கட்டாக்கில் உள்ள ஐரோப்பிய பள்ளி ஒன்றில் சேர்த்தனர். ஆங்கிலமே பாடமொழியாக இருந்தது.

சுபாஷ் அப்பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும்போது, பக்கத்து ஊரில் காலரா. காலரா நோய் வந்துவிட்டது என்றால் அந் நாளில் ஊரைக் காலி செய்துவிட்டு ஓடுவதைத் தவிர வேறு வழி இல்லை. ஏனெனில் காலரா நெருப்பை விடக் கொடியது. ஒருவரைப் பிடித்துக்கொண்டால் அருகில் நிற்கும் எவரையும் உடனே பிடித்துக் கொள்ளும். அன்றைக்கு இந் நோய்க்குச் சரியான மருந்தே இல்லை. மக்கள் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் இறந்து போவர். ஊரில் நோய் பரவுவதை அறிந்ததும் ஒவ்வொருவரும் தப்பிக்க எண்ணுவரே அன்றி நோய் கண்டவர்க்கு உதவி செய்யவோ, இறந்து போனவர்களை எடுத்து அடக்கம் செய்யவோ எவரும் முன் வர மாட்டார்கள்!

'இளம் கன்று பயம் அறியாது' என்பது போல அல்லற்படும் அவ்வூர் மக்களுக்கு உதவி செய்ய எண்ணியது சுபாஷின் மனம். நான்கு பள்ளி மாணவர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு அவ்வூருக்குச் சென்று விட்டார். அந்த ஒன்பது வயது சிறுவனும் அவனது தோழர்களும் தம்மால் முடிந்த உதவிகளை அந் நோயாளிகளுக்குச் செய்தனர்.

பள்ளிக்குச் சென்ற பையன் வீடு திரும்பவில்லை. பெற்றோர்கள் தெரிந்த இடங்களில் எல்லாம் தேடினார்கள். உற்றார், உறவினர் இல்லங்களுக்கு எல்லாம் ஆள் அனுப்பினார்கள். வீடு சோகக் கடலில் தவித்தது. தாய் பிரபாவதி ஒப்பாரி வைக்கத் தொடங்கினார். மூன்று நாட்கள் ஓடி விட்டன. நான்காம் நாள் மாலையில் சுபாஷ் தமது தாயாரின் கண்ணை வந்து பொத்தினார்.

தாய்க்கு யாரென்று புரிந்துவிட்டது. ''அடேய் சுபாஷ் எங்கேயடா போயிருந்தாய்?'' என்று அப்படியே வாரி எடுத்தார். சுபாஷ் வீட்டினுள் நுழைந்து தாம் சென்றதையும், செய்த தொண்டினையும் விலாவாரியாக எடுத்துரைத்தார். அப்போது பெற்றோரின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. காணாமல் போன தமது மகன் கிடைத்துவிட்டான் என்பதனாலும் இந்தப் பிஞ்சு வயதிலேயே பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் கொண்டிருக்கின்றானே என்பதானாலும் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்தான் அது என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

அப்போது இந்தியா ஆங்கிலேயர்களுக்கு அடிமைபட்டுக் கிடந்தது. சுபாஷின் மனம் எப்போதுமே இந்திய மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதிலேயே நாட்டமாக இருந்தது. எனினும் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர் ஆகியோரின் வற்புறுத்தலுக்கு இணங்க வேண்டியதாயிற்று. தமது எம்.ஏ படிப்பை நிறுத்திவிட்டு ஐ.ஏ.எஸ் படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் கல்லூரியில் அவர் சேர்ந்தார்.

இங்கிலாந்தில் வாழும் இந்தியர்கள் அங்கு ஒரு சங்கத்தை நிறுவி, 'இந்தியர்

சங்கம்' என்று பெயரிட்டனர். ஒருமுறை அச்சங்கத்திற்குச் சென்றார் சுபாஷ். அங்குள்ளவர்களின் கருத்தும் நோக்கமும் அவருக்குப் பிடித்திருந்தது. அங்கு லோகமான்ய பாலகங்காதர திலகர், கவிக்குயில் சரோஜினி தேவியார் ஆகியோரின் சொற்பொழிவைக் கேட்டதும் சுபாஷின் உள்ளத்தில் புத்துணர்ச்சி ஏற்பட்டது. இங்கிலாந்தில் இருந்து கொண்டே இந்தியாவையும் அதன் விடுதலையையும் எண்ணிப் பார்க்கத் தொடங்கினார்.

1921 ஆம் ஆண்டு சுபாஷ் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் தேசபந்து சித்தரஞ்சன்தாஸ், லாலாலஜபதிராய், மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, டாக்டர் ராஜேந்திரபிரசாத் போன்றவர்கள் அணி திரண்டு நின்றிருந்தனர். வெள்ளையர்களுக்கு எதிராக வீர முழக்கங்களை விண்ணதிர, மண்ணதிர எழுப்பிக் கொண்டிருந்தனர்.

இந்திய வீதிகளில் எழும்பிய இந்தக் குரல் இங்கிலாந்து தெருக்களிலும் கேட்கத் தொடங்கியது. வீரர் சுபாஷின் நெஞ்சம் வீறு கொண்டு விம்மிற்று. ஐ.சி.எஸ் படித்து ஆங்கில அரசாங்கத்தில் ஓர் அடிமை ஆளாகக் கூலி பெற்றுக் கொண்டிருப்பதைவிட பாரதமாதாவின் அடிமை விலங்கை தகர்த்தெறியும் படையில் கடைசி ஆளாகவேனும் சேர்ந்து விடுவதே புத்திசாலித் தனம் என எண்ணலானார்.

அதற்காக ஐ.சி.எஸ் படிப்பைக் கைவிட்டு இந்தியா செல்ல வேண்டும் எனத் தீர்மானித்தார். அவரது தீர்மானத்தை அறிந்த அவரது நண்பர்கள் பலர் தடுக்க முன் வந்தனர். அவர்களுக்கெல்லாம் தக்க பதிலளித்து விட்டு விடுதலைக் கனல் தெறிக்க நின்றிருந்தார் நமது வீரர் சுபாஷ்.

ஆங்கில நண்பன் ஒருவன், ''சுபாஷ்! நீ வந்தது ஐ.சி.எஸ் படிப்பிற்காக. அதனை இடையிலே விட்டுச் செல்வது என்ன நியாயம்? உன்னை இங்கு அனுப்பி வைத்த உன் பெற்றோரின் ஆசை நிராசை ஆகாதா?'' என்றான்.

''அருமை நண்பனே...! எனது பெற்றோரின் ஆசையை நிறைவேற்றுவதைவிட எனது மண்ணின் ஆசையை நிறைவேற்றும் கடமையே என் கண்முன் நிற்கிறது. விடுதலை... விடுதலை... அதைத் தவிர எனக்கு வேறு சிந்தனையே இல்லை!'' என்றார். பிறகு இந்தியா வந்து விடுதலைப் போரில் ஈடுபட்டார்.

- சு. கண்ணகி





புரோட்டீன் சத்தைத் தேடி அலையுது!

பிள்ளைகளுக்குப் புகழ்பெற்றவர்களைப் பற்றிய சுவையான கதைகள் - அப்பாஸ் மந்திரி - பக் 116 - ரூ. 47 - மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

மாணவர்கள் தன்னிடமே தங்களுக்குத் தேவையான நூல்களையும் குறிப்பேடுகளையும் வாங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்திய ஆசிரியரை இரும்பு மனிதர் என்று போற்றப் படும் வல்லபாய் பட்டேல் தனது மாணவப் பருவத்தில் எப்படி மாற்றினார் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதுபோல் அறிஞர்கள், தலைவர்கள் பலரது வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான 50 நிகழ்ச்சிகளை இந்த நூலில் தந்துள்ளார்கள். தரமான தயாரிப்பு. படங்களும் உள்ளன.

டிடெக்டிவ் டினோ முதல் தொகுதி - அப்பாஸ் மந்திரி - பக் 96 - ரூ. 40 - மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை - 17.

நாட்டில் நடப்பதைப் போலவே காட்டிலும் விலங்கு பறவைகளுக்கென அவற்றாலேயே ஓர் ஆட்சி நடைபெற்றால் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனைச் சுவையோடு படைத்திருக்கிறார் ஆசிரியர். சிறுவர் மட்டுமென்ன, பெரியவர்களையும் படிக்கத் தூண்டும் படைப்பு.

திருநெல்வேலிச் சீமை தந்த தீரர்கள் - எஸ். எஸ். வாசன் - பக் - 118 - ரூ. 25. மணிமேகலை பிரசுரம், 7 தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17.

திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றிய விடுதலைப் போராட்ட வீரர்களான வ.உ.சி, சுப்ரமணிய சிவா, வாஞ்சிநாதன், பாரதியார், ஊமைத்துரை, கட்டபொம்மன், பூலித்தேவர், வெள்ளையத்தேவன் ஆகிய எட்டுப் பேர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் தரப்பட்டுள்ளது. நாட்டுக்கு உழைத்த செம்மல்களின் வாழ்க்கையைக் கட்டாயம் அறிந்திருப்பது அவசியம்.

அறிவியல் பாடுவோம் - மாலதி ஹரீந்திரன் - பக் 88 - ரூ. 20 - டாக்டர் ரீடர், சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி - 627 007

அறிவியல் நோக்கில் எழுதப்பட்ட 68 பாடல்களின் தொகுப்பு. பாடல்களில் துள்ளச் செய்யும் சந்தத்திற்குக் குறை வில்லை. பெரும்பாலானவை அறிவியல் கண்ணோட்டத்தில் எழுந்தவை. இதோ மாதிரிக்கு ஒன்று —

பெண் கொசுக்கே முட்டையிடும்
கடமை யொன்று இருக்குது — அக்
கடமையினால் புரோட்டீன் சத்தைத்
தேடி அதுவும் அலையுது
புரோட்டீன் சத்து மனித உடலில்
விலங்கி டமும் இருக்குது
அதனால்தான் பெண் கொசுக்கள்
அலந்து பறந்து கடிக்குது!

— பக்கம் 27

படங்கள் இல்லாததுதான் குறை. — ரே



நினைத்தது ஒன்று; நடந்தது இன்னொன்று!

சுப்பனிடம் வயல் இருந்தது. அதில் நெல் பயிரிட்டிருந்தான். சுப்பனுக்குப் புத்திமட்டு. ஆனாலும் நல்லவன்.

சுப்பனுக்கு எதிர்வீட்டுக்காரன் குப்பன். குப்பனுக்கும் நிலம் இருந்தது. ஆனால் அதில் விளைச்சல் சரியில்லை. அதனால் சுப்பன் மீது அவனுக்குப் பொறாமை உண்டு.

நன்றாக விளைந்திருக்கும் சுப்பன் வயலை, நிர் மூலமாக்கி, அழித்துவிட வேண்டும் என குப்பன் திட்டமிட்டான்.

கடைசியாக... அறுவடை செய்யப் போகும் வயலில் தங்கம் இருப்பதாகப் பொய் கூறுவது என முடிவெடுத்தான்.

சுப்பனை அருகில் அழைத்தான்.

''உன் வயலில் நெல் ரொம்ப நல்லா விளைஞ்சிருக்குப் போலிருக்கே. ஆனால் நீ பாவம்.''

''ஏன்..?''

''நேற்று ராத்திரி ஒரு கனவு கண்டேன். அதில் உன் வயலில் இன்று தோண்டும் போது தங்கப் புதையல் இருப்பது போல் கண்டேன். ஆனால் உடனே தோண்ட வேண்டும்.''

''அப்படியா! தங்கப்புதையலா?'' என்று சுப்பன் வாயைப் பிளந்தான்.

உடனே அவனுக்குத் தங்கப் புதையலைப் பார்க்க ஆசை எழுந்தது.

ஆட்களைக் கூட்டி வந்து தன் வயலைத் தோண்ட ஆரம்பித்தான். இதனால் விளைந்திருந்த நெல்லெல்லாம் பாழாயிற்று. ஆனால் அதனைப் பற்றி கவலைப்படாமல் சுப்பன் தோண்டிக் கொண்டிருந்தான்.

இதைப் பார்த்த குப்பன் மனதிற்குள்,

'சுப்பன் சரியான அப்பாவி. நான் சொன்னதை அப்படியே நம்பிவிட்டான். நெல்லும் போய் தங்கப் புதையலும் கிடைக்காமல் திண்டாடப் போகிறான்,' என மகிழ்ந்தான்.

ஆனால் சுப்பன் வயலிலிருந்து திடீரென வித்தியாசமான சத்தம் கேட்டது. மேலும் தோண்டியபோது, ஒரு குடம் இருந்தது. அதனை வெளியே எடுத்துப் பார்த்தபோது அது முழுவதும் தங்கக் காசுகளால் நிரப்பப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த குப்பனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. 'பொய் சொன்னோம். ஆனால் பலித்துவிட்டதே..' என அவன் திகைத்தான்.

அப்போது அவன் மனம் மீண்டும் சிந்தித்தது. இந்தப் புதையல் கிடைக்க நாம்தானே காரணம்? சுப்பனை சும்மா விடக் கூடாது என மீண்டும் அவன் அருகில் சென்றான்.

''சுப்பா, உனக்குப் புதையல் கிடைக்க நான்தான் காரணம். அதனால் கிடைத்ததில் பாதியை என்னிடம் கொடுத்துவிட வேண்டும்.''

''உண்மைதான் குப்பா. நீ மட்டும் சொல்லியிருக்காவிடில் எனக்குத் தங்கப் புதையல் கிடைத்திருக்குமா? ஆக நீ கேட்டபடியே உனக்குப் பாதியைத் தந்துவிடுகிறேன். வைத்துக் கொள்...'' என்றான் சுப்பன்.

இந்தப் பதில் குப்பனைத் திடுக்கிட வைத்தது. இத்தகையதொரு பதிலை அவன் எதிர்பார்க்கவில்லை.

'சுப்பன் நல்லவன். அதனால் அவனுக்கு நல்லதே நடக்கிறது. அதற்கு ஏற்ப அவனும் நல்லதையே நினைக்கிறான். ஆக நாமும் பொறாமையைக் கை விட்டு நல்லவனாக மாறினால் நமக்கும் நல்லது நடக்கும் எனச் சிந்தித்தான்.

அடுத்த நிமிடம் முதல் குப்பனின் மனதிலிருந்து பொறாமை அகன்றது.

- வி.ஆர். கிருத்திகா, திருச்சி

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 பு	த்	த	ர்		சி	ட்	னா	2 மீ
ஷ்					ட்			த
3 ப	சி	4 பி	க்		5 ப	ர	6 த	ம்
க		ற					லை	
ம்		7 வி	ல்		8 வே	ர்		ம்
	தை					யி		ய
ம்	9 க	ங்	10 வ		ம்	11 த	ந்	12 த
த			ய					ந்
13 வ	க்	கீ	ல்		ம்	ள	வ	14 ப

புதிர் உலகம் விடைகள் :

I. ஆண்கள் : 3, பெண்கள் : 4.

II. (45 + 36) - 15

மொத்தம் 66 பேர்

III. தண்ணீரின் அளவு அதிகமாகும். ஏனெனில் காணாமல் போன மீனை நினைத்து மற்ற ஒன்பது மீன்களும் 'கண்ணீர்' விட்டு அழுமே!

IV. சேவல் முட்டை யிடாது. ஹிஹி!

V. காளமேகப் புலவர் கால் என்று குறிப்பது ¼ அளவை. பறவை இனத்திற்கு 9 கால் என்பது (9x¼ = 2¼) பறவை இனத்திற்கு இரண்டே கால்கள் என்ற பொருள் தரும். அதேபோல் யானைக்கு 17 கால் என்பது (17x¼ = 4¼) நாலே கால்கள் என்று பொருள்!


VI. வேலைக்குச் சென்ற நாட்கள் - 22

வேலைக்குச் செல்லாத நாட்கள் - 8

22 x 18 = 396

8 x 15 = 120

396 - 120 = 276 ரூபாய்.



கண்ணன் வில் ஒடித்த கதை!

ராமர் வில்லை ஒடித்து சீதையை மணம் புரிந்த கதை எல்லாருக்கும் தெரியும். ஆனால் கண்ணன் வில் ஒடித்த கதையைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கிருஷ்ணனையும் பலராமனையும் ஒழித்துக்கட்ட பலவிதமாக முயன்ற கம்சன் ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வி அடைந்தான். கடைசியில் அவர்களைத் தன் தலைநகரான மதுராபுரிக்கே அழைத்து வந்து கொன்று விடுவது என்று சதி செய்தான். இதற்காகவே தனுர்(வில்)யாகம் நடத்தத் தீர்மானித்து அதற்குப் பல சிற்றரசர்களுக்கும் அழைப்பு அனுப்பினான். அழைப்பிதழை ஏற்று நந்தகோபர் வந்து விடுவார் என்பதில் கம்சனுக்குச் சந்தேகமில்லை. ஆனால் கண்ணனும் பலராமனும் வராமலிருந்து விட்டால்...? அதற்காக அக்ரேர் என்ற மந்திரியை நேரில் அனுப்பி வைத்தான்.

அக்ரேர், கண்ணனிடம் பக்தி பூண்டவர் என்பது கம்சனுக்குத் தெரியும். 'எப்படியும் அழைத்து வந்து விடுவார்' என்று நம்பினான். ஆனால் கம்சனின் சதித்திட்டத்தை அறிந்து கொண்ட அக்ரேரரோ, பிருந்தாவனத்துக்கு வந்து சேர்ந்ததும், கண்ணனிடம் கம்சனின் வஞ்சக நோக்கத்தைத் தெரியப்படுத்தி விட்டார். பிறகு அவர்களுக்குத் தேரோட்டும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து, அழைத்து வந்தார். முன்னெச்சரிக்கை அடைந்த கண்ணன், அக்ரேருக்கு அருளி, மதுராபுரியில் பட்டணப் பிரவேசம் செய்தான். மக்கள் அவனை வாழ்த்தி வரவேற்றனர்.

யாக சாலையில் பிரும்மாண்டமான வில் ஒன்று பூஜிக்கப்பட்டு வந்தது. அதை யாராலும் தூக்கவோ, பிடித்து நிறுத்தவோ முடியாது. கண்ணன், தன்னைத் தடுத்த காவலர்களையும் மீறி யாக சாலைக்குள் புகுந்து, அந்த வில்லை எடுத்து இரண்டாக முறித்து விட்டான். அந்த ஓசை வானம் பிளந்தது போல், பயங்கரமாக இருந்தது. "யாக வில்லை முறித்து விட்டான்" என்பதாகக் கண்ணன் மீது குற்றம் சாட்டி, பட்டத்து யானையை அவன் மீது ஏவிவிட்டான் கம்சன். 'குவலயா பீடம்' என்ற அந்த யானை, ஆயிரம் யானைகளின் வலிமை கொண்டது. மதம் ஏறிய அந்த யானைக்கு மேலும் வெறியூட்ட யானைப் பாகன் அதனை அங்குசத்தால் குத்தினான். யானை பிளிறிக் கொண்டு கண்ணனைத் தாக்க நிலம் அதிர ஓடி வந்தது. கண்ணன் அதன் துதிக்கை மீது ஏறி, முன்நெற்றியில் ஓங்கிக் குத்தினான். அதன் தந்தங்களை முறித்தான். யானை பயங்கரமாக அலறி விழுந்து இறந்தது. இப்போது "பட்டத்து யானையைக் கொன்று விட்டான்" என்ற புதிய குற்றச் சாட்டும் கண்ணன் மீது சுமத்தப்பட்டது!

விரோதம் என்று வந்து விட்டால், எப்படியாவது வம்புக்கிழுத்து, ஏதாவது குற்றம் சுமத்தி வதைக்க வேண்டும் என்பது கண்ணன் காலத்தில் மட்டுமல்ல; இன்றும் தொடர்கதைதான்! ஆனால் 'கேடு நினைப்பவன் கெடுவான்' என்பதற்கு ஏற்ப கம்சனுக்கே முடிவு நெருங்கி வரத்தான் செய்தது!

— ஆசிரியர்

சிரிப்பை வரவழைத்துவிட்டது!

✉ "காலம் தாழ்த்தாதே சிறுகதை படித்தேன்; காலத்தின் நலனைக் கருதி உரிய நேரத்தில் நாம் நமது பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். அப்படி செய்தால் வாழ்க்கை மேன்மை அடையும் என்பதை அழகாக எடுத்துக்காட்டியது" என்கிறார் என். சுதாகர், புள்ளபூதங்குடி.

✉ சென்னையிலிருந்து ஆர். அனிஸ் ராஜா "என் அபிமான கிரிக்கெட் வீரர் அனில் கும்ப்ளேயின் நடுபக்க வண்ண போஸ்டர் அட்டகாசமாக இருந்தது. அதிலும் டெஸ்ட் மேட்ச், ஒன்டே மேட்ச் ஆகிய போட்டிகளுக்கான உடைகளுடன் அந்த போஸ்டர் அமைந்திருந்தது என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிட்டது" என்கிறார்.

✉ "நல்லதைக் கேளா துள்ளுமீன் என்ற பாடல் ஒரு பாடத்தையே உணர்த்திவிட்டது. நுணலும் தன் வாயால் கெடும் என்ற பழமொழிக்கு உதாரணமாக இருந்தது வெண்டைச் செடியும் வேப்பங்கன்றும் என்ற கதை" என்கிறார் இராசி. முருகன், இராமசமுத்திரம் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்.

✉ நாமக்கல்லிலிருந்து தர்மலிங்கம், "உதய்ராஜ் பேட்டி படித்து மகிழ்ந்து போனேன். சின்னஞ்சிறு வயதிலேயே தேசிய விருது வாங்கியிருப்பது சாதாரண விஷயம் இல்லை. உதய்ராஜ் ஆஸ்கார் அவார்ட் வாங்க என் வாழ்த்துகள்" என்கிறார்.

✉ "வாய்க்குள் விழுந்த 100 ஒட்டகங்கள் கதையும் படமும் சிரிப்பை வரவழைத்து விட்டன. அதே போல் பரிசு ஜோக்ஸ் அனைத்தும் பயங்கர சிரிப்பை வரவழைத்து விட்டன" என்கிறார் காஞ்சிபுரத்திலிருந்து எம். நாககன்னிகா.

✉ பாப்பிரெட்டிபட்டியிலிருந்து கே. புனிதா, "சென்ற இதழில் படக்கதைகளும், பிரபலங்களின் வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்களும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. எங்கள் வீட்டில் உள்ள அனைவரின் கைரேகைகளையும் வைத்து பரிசோதித்தோம். ஒவ்வொருவரின் ரேகையும் ஒவ்வொரு மாதிரி இருந்தது" என்கிறார்.



ஓவியப் போட்டி

பறவைகளின் அரசன் யார் என்று கேட்டால் உடனே கழுகு என்று சொல்லி விடுவீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: கழுகு. கழுகு பறக்கலாம், உட்கார்ந்திருக்கலாம், சண்டை போடலாம்... எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரியைத் தரவும். கடைசி தேதி 4.3.2002.

கோகுலம் நிகழ்வுகள்



• ராமமோகனராவ்

புதிய கவர்னர்

தமிழ்நாட்டின் புதிய கவர்னராக ராம மோகன ராவ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆந்திராவைச் சேர்ந்த முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி.

நில அதிர்வு

குஜராத் மாநிலத்தில் கடந்த ஆண்டு நில நடுக்கம் ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிர் இழந்தனர். அதற்குப் பிறகு நாள்தோறும் சராசரியாக மூன்று முறை நில அதிர்வு ஏற்பட்டு வருகிறது. இந்த நில அதிர்வு மிக குறைவாக 3 ரிக்டர் அளவு மட்டுமே ஏற்படுவதால் சாதாரணமாக அதிர்வை உணர முடியாது. கடந்த ஜனவரி 26ந் தேதியிலிருந்து இந்த ஆண்டு ஜனவரி 20ந்தேதி வரை 960 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

எரிமலை

ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நாட்டில் கோமா என்ற எரிமலை வெடித்து தீக் குழம்பைக் கக்கியது. இந்தத் தீக் குழம்புகள் ஊருக்குள் புகுந்ததில் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாண்டு விட்டனர். தீ ஆறு சென்ற வழியெங்கும் இருந்த கட்டடங்கள், பொருட்களுடன், மனிதர்களும் அழிந்தனர். மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் ஊரைக் காலி செய்து விட்டனர்.

இன்சாட் 3 - சி

உலக நாடுகள் இந்தியாவைப் பார்த்து பொறாமைப்பட வைக்கும் அளவுக்கு செயற்கைக் கோள் உலகில் மற்றொரு சாதனையைப் படைத்துள்ளது இந்தியா. தென்அமெரிக்காவைச் சேர்ந்த பிரெஞ்சு கயானாவில் உள்ள ஏவுதளத்திலிருந்து ஐரோப்பிய ராக்கெட் 'ஏரியான்' - 4 மூலம் இன்சாட் 3 - சி செயற்கைக் கோள் விண்வெளியில் ஏவப்பட்டது. இன்சாட் 2-சியின் ஆயுட்காலம் நிறைவடைவதால் இந்த 3-சி செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளது. இதன்மூலம் தகவல் தொழில் நுட்பத்தில் இந்தியா வியத்தகு சாதனைகளைப் படைக்க இருக்கிறது.



• விருதுபெற்ற வீரச் சிறுவர்கள்

வீர தீர விருது

நாடு முழுவதிலுமிருந்து வீரச் செயல்களைப் புரிந்த 25 சிறுவர்களுக்கு வீரதீர விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அக்னி

700 கிலோ மீட்டர் தூரம் பாய்ந்து தாக்கக் கூடிய அக்னி ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.

"மேன்மை பொருந்திய மகாராஜா வுக்கு வணக்கம்."

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தது சிங்க மகாராஜா. கூப்பிய கரங்களோடு நின்று கொண்டிருந்தது கரடி.

"மகாராஜா! தாங்கள் என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னீர்களாம். பணியாள் தெரிவித்தான்..." கரடி கூறியது.

"ஆமாம். நம் கருவூல அதிகாரி இன்னும் ஒரு வாரத்தில் ஓய்வு பெறப் போகிறார். அந்தப் பதவிக்கு உன்னை நியமிக்க நான் முடிவு எடுத்துள்ளேன். உனக்கு மகிழ்ச்சி தானே?" சிங்கம் வினவியது.

"அரசே! எனக்கு மிக்க மகிழ்ச்சி" - பணிவோடு பதில் சொல்லியது கரடி.

"இந்தப் பதவிக்கு வருபவர்கள் ஆயிரம் பொற்காசுகள் டெபாசிட் கட்ட வேண்டும் என்ற விஷயம் உனக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்."

"தெரியும் அரசே! தற்சமயம் என்னிடம் இவ்வளவு பொற்காசுகள் இல்லை. பத்து நாட்கள் டைம் கொடுங்கள். அதற்குள் ஏற்பாடு செய்து கட்டி விடுகிறேன்" என்று கரடி கூறியதும் 'சரி' என்று சொல்லிவிட்டது சிங்கம்.

செய்தியை அறிந்த நரி திடுக்கிட்டது. தான் எப்படியாவது கருவூல அதிகாரியாக ஆக வேண்டும். அப்பொழுதுதான் பொய்க் கணக்கு எழுதி பணத்தை நிறைய சுருட்டி கோடீஸ்வரனாக ஆக முடியும் என்று மனக் கோட்டை கட்டியிருந்தது. சிங்கத்தை எப்படி காக்காய் பிடிப்பது என்றுகூட யோசித்து வைத்திருந்தது. ஆனால் சிங்கமே முடிவு எடுத்து கரடியை நியமிக்கத் தீர்மானித்து விட்டதால் நரிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எப்படியாவது கரடியின் மீது சிங்கத்திற்குக் கெட்ட எண்ணம் வர வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? என்று யோசித்தபடியே நடந்து கொண்டிருந்தபோது - அதன் பார்வையில் - தொலைவில் - சிங்கமகாராஜாவின் மகன் - குட்டி இளவரசன் - புவன் தன் நண்பர்களுடன் ஓடி ஒளிந்து விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. சில நிமிடங்கள் அங்கேயே நின்றபடி விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருந்த நரியின் மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டு மறைந்தது. ஆம்! புவனைக் கடத்த திட்டமிட்டது. மறு வினாடியே செயலில் இறங்கிவிட்டது.

அதிகாலையிலேயே தன் வீட்டிற்குள் நுழைந்த நரியைப் பார்த்த கழுதைக்கு வியப்பு தாங்கவில்லை. மகிழ்ச்சியுடன்



த. ஜானகி

இளவரசனைக் கடத்தியது யார்?

வரவேற்று உபசரித்தது.

"கழுதையாரே! ஒரு சின்ன உதவி. அதை நீ செய்தால் உனக்கு நூறு பொற்காசுகள் தருகிறேன்" என்று நரி கூறியது.

நூறு பொற்காசுகள் என்றதும் கழுதைக்கு ஒரே குஷி. சந்தோஷத்தில் தைய்யா தைய்யா... என பெரிய குரலில் பாட வேண்டும்போல் தோன்றியது. தன் பாட்டைக் கேட்டு நரி ஓடி விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் வரவே கஷ்டப்பட்டு தன்னுடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டது.

"என்ன செய்ய வேண்டும் என்பதை விவரமாகச் சொல். செய்யத் தயாராக இருக்கிறேன்."

"இப்ப நான் சொல்லப் போற விஷயம் நம் இரண்டு பேருக்கு மட்டும்தான் தெரிந்திருக்கணும். வேற யார்கிட்டேயும் இதைப் பத்தி மூச்சு கூட விடக்கூடாது. தெரிந்ததா?"

"தெரிந்தது."

"நம் குட்டி இளவரசன் புவனைக் கடத்திக் கொண்டு வந்திருக்கிறேன்."

"என்ன...?"

"நான் இருக்கும்போது நீ ஏன் பயப்படறே. நேற்று மாலை புவன்



கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தான். அவன், சற்று தள்ளி இருந்த புதருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தபோது மயக்க மூலிகைப் பொடியை அவனுக்குப் பின்னாலிருந்து மூக்கில் காண்பித்து விட்டேன். மறுவினாடி அப்படியே மயங்கி விழுந்துவிட்டான். ஆட்டுக் குட்டியை அமுக்குவது போல சட்டுன்னு ஒரு அமுக்கு அமுக்கிக் கோணிப் பைக்குள்ளே போட்டு யாரும் எளிதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு பாதுகாப்பான இடத்திலே அவனை வைச்சிருக்கேன்.''

''ஐயய்யோ...'' கழுதை அலறியது.

''இங்கதான் உனக்கு வேலையே இருக்கு. சிங்க மகாராஜாவுக்கு ஆயிரம் பொற்காசுகள் கேட்டு கரடி சொல்லி எழுதுவது போல் புவனை எழுத வைக்க வேண்டும். எதற்குத் தெரியுமா? அப்பத்தான் சிங்கமகாராஜாவுக்குக் கரடிதான் தன் மகனைக் கடத்தி பணம் கேட்கிறது என்ற எண்ணம் ஸ்ட்ராங்காக வரும். புரிந்ததா?''

''எனக்குப் பயமா இருக்கு.''

''டோன்ட் வொர்ரி. நான் இருக்க பயமேன். இப்பொழுது நீ என்ன செய்ய வேண்டும். தெரியுமா? நான் கொடுக்கும் இந்தக் கரடி டிரஸ்ஸைப் போட்டுக் கொண்டு புவன் இருக்கும் இடத்திற்கு வர வேண்டும். கரடி சொல்வதுபோல் புவனை எழுதச் சொல்ல வேண்டும். நீ மறுத்தால் என்ன செய்வேன் தெரியுமா? நீதான் புவனைக் கடத்தியதாக மகாராஜாவிடம் சொல்வேன்...'' நரி மிரட்டியது.

''சரி... நீ சொல்றபடி கேட்கிறேன்'' என்று கூறிய கழுதை நரியைப் பின் தொடர்ந்தது.

மயக்கம் தெளிந்து கண் விழித்த குட்டி சிங்கம் புவனுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. மெதுவாக எழுந்து உட்கார்ந்து சுற்றும் முற்றும் பார்த்தது. புது இடத்திற்கு எப்படி வந்தோம் என்று யோசிக்கும்போதே முதல்நாள் மாலை மயக்க மருந்தின் மூலம் தான் கடத்தப்பட்டது ஞாபகத்திற்கு வந்தது. எப்படியேனும் இவ்விடத்தை விட்டு தப்பிக்க வேண்டும் என்று சுற்றும் முற்றும் ஆராய்ந்து கொண்டிருந்தபோது யாரோ வரும் காலடி ஓசை கேட்டுத் திடுக்கிட்டுப் பார்த்தபோது சற்றுத் தள்ளி ஒரு கரடி நின்று கொண்டிருப்பது மங்கிய ஒளியில் அரைகுறையாகத் தெரிந்தது.

''புவன்! நான் சொல்றபடி நீ எழுதிக் கொடு. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்'' என்று கூறியபடி சற்று தள்ளி நின்றபடியே எழுதுவதற்கான சாதனங்களை அதனிடம் கொடுத்தது கரடி வேடம் பூண்ட கழுதை.

வேறு வழி இன்றி புவன் எழுதத் தயாரானது.

நரி சொன்னதை மனப்பாடம் செய்திருந்த கழுதை, கரடி குரலில் சொல்லச் சொல்ல புவன் எழுத ஆரம்பித்தது.

'அன்புள்ள அப்பா, தாங்கள் ஆயிரம் பொற்காசுகளை இன்று இரவு பத்து மணிக்குத் தேன்கூனைக்கு அருகில் இருக்கும் ஆலமரத்தடியில் வைத்து விட்டால் என்னை உடனேயே விடுவித்து நம் அரண்மனைக்கு அனுப்பி விடுவார்களாம். இதை எழுதச் சொன்னது கரடிதான். ஆனால் தன்னைக் காட்டிக்கொடுக்கக்கூடாது. தன்னைப் பிடிக்கக்கூடாது என்று கரடி கேட்டுக் கொண்டுள்ளது. தயவு செய்து என்னைக் காப்பாற்றுங்கள்.

தங்கள் அன்புள்ள

புவன்.

எழுதிய மடலை வாங்கிக் கொண்ட கழுதை வேகமாக கதவைச் சாத்தியபடி வெளியே வந்து தயாராக நின்று கொண்டிருந்த நரியிடம் கொடுத்தது. மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்ட நரி அரண்மனை வாயிலில் இருக்கும் தபால் பெட்டியில் போட்டது.

''அந்த எழுத்தாளர் கதை எழுதும்போது அடிக்கடி தண்ணி குடிக்கறாரே... ஏன்?''

''கற்பனை 'வறண்டு' போகாமல் இருக்கறதுக்காகவாம்!''

- ஆர். குட்டி பிரசன்னா

''நாட்டில்தான் சிறுவர்களை கடத்தும் கடத்தல் மன்னர்கள் இருக்கிறார்கள் என்றால் காட்டிலுமா? சே... என்ன அக்கிரமம்... என்ன துணிவு இருந்தால் என் மகனைக் கடத்தி என்னிடமே காசு கேட்கிறார்கள்? ராஜாவின் மகனுக்கே இந்த நிலைமை என்றால்... நான் சும்மா விட மாட்டேன்... டெபாசிட் கட்ட வக்கில்லை என்றால் அதைப் பெற இதுதான் வழியா...? இழுத்து வரச் சொல்லுங்கள் அந்தக் கரடியை... அதை எப்படி துவைத்து எடுக்கப் போகிறேன் என்று பாருங்கள்.''

அன்றைய தபாலில் வந்த மடலைப் படித்த சிங்கம்தான் இவ்வாறு கர்ஜித்தது. கோபத்தினால் அதன் முகம் அந்திவானம்

போல் சிவந்தது.

அருகில் இருந்த மந்திரி புலி கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்தது. பிறகு சிங்கத்தைப் பார்த்து, ''மன்னரே! கோபம் கொள்ளாதீர்கள். நான் சொல்வதைப் பொறுமையாகக் கேளுங்கள். புவனை எந்த இடத்தில் ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியாது. நாம் பொற்காசுகள் தர மறுத்தால் ஒருவேளை நம் புவனுக்கு ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம். இரண்டாவது கரடியைக் கூப்பிட்டு விசாரித்தால் தனக்கு ஒன்றுமே தெரியாது என்றும் சொல்லலாம். குற்றவாளியைத் தகுந்த ஆதாரத்தோடுதான் பிடிக்க வேண்டும். ஆயிரம் பொற்காசுகளுக்குப் பதிலாக தங்கமுலாம் பூசிய ஆயிரம் பித்தளைக் காசுகளைக் கொடுத்து விடுவோம். புவன் அரண்மனைக்குப் பத்திரமாக வந்ததும் மேற்கொண்டு ஆலோசிப்போம்!'' என்று அமைதியான குரலில் சொல்லியது. புலியின் கூற்றில் இருந்த உண்மையை உணர்ந்த



சிங்கம், புலி சொற்படியே நடக்கத் தீர்மானித்தது.

மறுநாளே, புவன் அரண்மனைக்கு வந்துவிட்டது. அதற்கு மறுநாளே கரடி டெபாசிட் தொகையைக் கட்டிவிட்டது. டெபாசிட் பொற்காசுகளைப் பரிசோதித்த மன்னருக்கு ஒரே வியப்பு. அனைத்து பொற்காசுகளும் அசல் தங்கக் காசுகளாகவே இருந்தன. அப்படி என்றால் முலாம் பூசிய காசுகள் எங்கே.... யார்... எப்படி? சிங்கம் வினவ, புலி யோசிக்க ஆரம்பித்து, புவனைக் கூப்பிட்டு விசாரித்தது.

''மந்திரியாரே! எனக்கு என்னவோ என்னை மிரட்டிய கரடி உண்மையான கரடியாக இருக்கும் என்று தோன்றவில்லை. ஏன் தெரியுமா? தள்ளி நின்று கொண்டு முகத்தை லேசாக திருப்பிக் கொண்டு பேசியது. அது வெளியே நடந்துபோனபோது கரடி போல நடந்து செல்லவில்லை. காலடிச் சுவடிகள் கரடியின் கால் சுவடுகள் மாதிரி தெரியவில்லை!'' என்று புவன் கூறியது.

திகைத்தது சிங்கம். சிந்தித்தது புலி... குழம்பியது புவன்.

புவனைக் கடத்தியது யார், யார்...? என்று தினமும் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தபோது ஒரே மாதத்தில் தெரிந்துவிட்டது யார் என்று.

கரடி டெபாசிட் தொகையைக் கட்டியதும் உடனே மன்னர் அதைக் கைது செய்துவிடுவார் என்று ஆவலோடும், ஆசையோடும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நரிக்கு ஒரே ஏமாற்றம். விசாரித்ததில் கரடி தனக்குச் சொந்தமான வயல்களை அடகு வைத்து பொற்காசுகளைக் கட்டிவிட்டது என்று அறிந்துகொண்டது.

'ஒருவேளை மன்னருக்கு உண்மை தெரிந்திருக்குமோ... இல்லை... இல்லை... உண்மை தெரிய வாய்ப்பே இல்லை... எதற்கும் கொஞ்ச நாளைக்கு வெளியே அதிகம் தலைகாட்டாமல் இருக்க வேண்டும். அப்புறம் இன்னும் ஏதாவது வழி கண்டுபிடித்து கரடியை மாட்டி விட வேண்டும்' என்று பலவாறாக எண்ணியபடி வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கொண்டது நரி.

ஆனால்... யாராவது தங்கமுலாம் பூசிய பித்தளை காசுகளைக் கொண்டு வந்தால் தன்னிடம் தெரிவிக்கும்படி புலி பொற்கொல்லர்களுக்கும், வியாபாரிகளுக்கும் ரகசியமாக உத்தரவு போட்டிருந்தது கழுதைக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. தனக்கு நரி கொடுத்த நூறு காசுகளை அசல் பொற்காசுகள் என்று நினைத்த கழுதை, தன் மனைவிக்கு நகை செய்யக் கொடுக்கும்போது பொற்கொல்லரான நாயிடம் வசமாக மாட்டிக்கொண்டது. முதலில் உண்மையை ஒத்துக் ..காள்ள மறுத்த கழுதை, மிரட்டி விசாரித்தபோது உண்மையைக் கக்கிவிட்டது. தான் அரிச்சந்திரனின் வாரிசு என்று வாதாடிய நரியை விசாரிக்கும் முறையில் விசாரித்தபோது தடபுடலான ராஜமரியாதையில் வலி தாங்காமல் குய்யோ முறையோ என்று கத்தி உண்மையை ஒத்துக்கொண்டது. மன்னர் கொடுத்த தண்டனையை ஏற்றுக்கொண்டது. சிறையில் அடைக்கப்பட்ட நரி, 'தகுதி இல்லாத நான் பெரிய பதவிக்கு ஆசைப்பட்டது தப்பு. கரடியைப் பார்த்து பொறாமைப் பட்டதும் தப்பு. சிறையிலிருந்து தண்டனை முடிந்து வெளியே வந்ததும் திருந்திய நல்ல நரியாக வாழ்வேன்' என்று உறுதி பூண்டது.

சிறையில் உருவான ஆட்டம்



* சைரஸ் பொன்சா

பெரிய நகரங்களில், சமுதாயத்தில் உயர் நிலையில் உள்ளவர்கள் மட்டுமே விளையாடும் 'ஸ்குவாஷ்' என்ற ஆட்டத்தைப் பற்றி உங்களில் பெரும்பாலோர் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். உலகில் நாற்பது நாடுகளில் இந்த விளையாட்டு பிரமாதமாக பேசப்படுகிறது. ஸ்குவாஷ் விளையாட்டைப் பற்றி இங்கே நமக்கு விளக்குபவர் மகாராஷ்ட்ரா மாநிலத்தைச் சேர்ந்த ஸ்குவாஷ் பயிற்சியாளர் சைரஸ் பொன்சா.

உலகில் எங்கு முதலில் இந்த ஆட்டம் ஆடப்பட்டது?

இந்த ஆட்டம் முதன் முதலாக ஆடப்பட்ட இடம் இங்கிலாந்திலுள்ள ஒரு ஜெயில் என்று சொன்னால் எல்லோருக்கும் ஆச்சர்யமாக இருக்கும். 18ம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட விளையாட்டு இது. அப்போது, ஜெயிலில் இருந்த கைதிகள் பொழுது போகவில்லை என்று புலம்பியபோது இந்த விளையாட்டு கண்டுபிடிக்கப்பட்டது. மூன்று பக்கம் சுவர். ஒரு பக்கம், இரும்பு கிராதிகள். இதுதான் ஜெயில் அறை. கைதிகளைத் திறந்த வெளியில் கிரிக்கெட்டோ அல்லது டென்னிஸோ ஆட அனுமதிக்க முடியாது. தப்பியோடும் வாய்ப்பு உண்டு. எனவே, கைதிகள் கையில் பேட்டையும், பந்தையும் கொடுத்து, பந்தைச் சுவரில் அடித்து விளையாடச் சொன்னார்கள். இதுதான் ஆரம்பம். கடந்த மூன்று நூற்றாண்டுகளில், ஆட்டக் களமும், ஆட்டமும் மிகவும் நவீனமாகிவிட்டன.

இப்போது ஒரு பக்கம் சுவர். மூன்று பக்கம் கண்ணாடித் தடுப்புகள், கொண்டது ஆட்டக் களம். சுவர் அளவு 21 அடி அகலம், 15 அடி உயரம். இதில் ஏழடிக்கு மேல் நடுவில் ஒரு கோடு உண்டு.



சுவர் இருவித வண்ணங்களால் பிரிக்கப்பட்டிருக்கும். சுவரில் அடிக்கப்பட்ட பந்து திரும்பி வரும் போது ஒரு வரையறைக்குள் நின்று அதைத் தடுத்து விளையாட தரையில் எல்லைக் கோடுகள் உண்டு. அதற்குள் சின்ன சதுரம். அதில் நின்றுதான் சர்வீஸ் போட வேண்டும். இதில் சிங்கிள்ஸ் என்ற தனி நபர் போட்டி

யும் உண்டு. இரட்டையர் ஆட்டமும் உண்டு.

இந்த ஆட்டத்தில் ஸ்கோரிங் எப்படி?

ஒரு ஆட்டத்துக்கு ஒன்பது பாயிண்ட். ஒருவர் போடும் சர்வீஸில் ஆட்டம் தொடங்கும். சர்வீஸ் சுவரில் போடப்பட்டுள்ள கோட்டுக்கு மேல் பட்டுத்தான் திரும்பி வர வேண்டும். ஒன்பது பாயிண்ட் ஒருவர் எடுத்து முடியும்வரை ஒரு ஆட்டம் தொடரும். மொத்த விளையாட்டில் ஐந்து ஆட்டங்கள் உண்டு. அதில் ஒருவர் மூன்றில் வெற்றி பெற வேண்டும்.

இந்த விளையாட்டு ஏன் பிரபல மடையவில்லை?

முதலில் ஸ்குவாஷ் ஆட்டக்களம் தயார் செய்ய அதிகம் செலவாகும். கிரிக்கெட் போன்று நினைத்த இடத்தில் விளையாட முடியாது. இதற்கு வேண்டிய ரப்பர் பந்துகள் இங்கிலாந்தில் தயாரிக்கப்படுகின்றன. பேட்கள் (ராக்கெட்) குறைந்த பட்ச விலையே சுமார் 3000 ரூபாய். இந்த நிலையில் ஆட்டம் எப்படி பாமரமயமாகும்? பெரு நகரங்களில் உள்ள கிளப்புகளில் இதற்கான ஆட்டக் களங்கள் இருக்கின்றன. சமுதாயத்தில் வசதியானவர்கள் தானே இந்த கிளப்புகளுக்கு வருவார்கள். ராணுவ கிளப்புகளிலும் இது உண்டு. சமீப காலமாகத்தான் சென்னை எழும்பூரில் இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் சார்பில் மிக நவீன ஸ்குவாஷ் ஆட்டக் களம் கட்டப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. இங்கு ஆர்வமுள்ளவர்களுக்கு இலவச பயிற்சி அளிக்கப் படுகிறது.

ஸ்குவாஷ் போட்டிகள் ஒலிம்பிக் அளவில் நடத்தப்படுகின்றனவா?

இந்த விளையாட்டு ஆடப்படுவது. பெரும்பாலும், இங்கிலாந்திடம் அடிமையாக இருந்த நாடுகளில் தான். ஒலிம்பிக்ஸில் இல்லாவிடிலும் சர்வ தேசப் போட்டிகள் நடக்கின்றன. பாகிஸ்தானில் இந்த ஆட்டம் மிகவும் பிரபலம். கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக அந்த நாடு சாம்பியனாக இருந்து வந்தது. இப்போது ஆஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகள் முன்னணிக்கு வந்துவிட்டன. சர்வதேச அளவில் போட்டி போட இந்தியா



கைக்கடிகாரங்கள் யாருக்கு?

ஜனவரி மாதப் போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களில் பலரும் கிளியின் ஆயுட்காலத்தில் தவறு செய்திருந்தனர். சரியான விடை எழுதியவர்களில் இருந்து இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பரிசு பெற்றவர்கள் :

1) கே.பி.புவனேஸ்வரி, பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, குமரலிங்கம், கோவை மாவட்டம்.

2) பி.யுவராஜ், ஒன்பதாம் வகுப்பு, மான்ட்போர்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி, திண்டிவனம்.

சரியான விடை : 1. எலி 2. பாம்பு 3. நாய் 4. கிளி, 5. யானை, 6. ஆமை.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

இன்னமும் தயாராக வேண்டும். உலக அளவில் சிறந்த ஆட்டக்காரர் ஸ்காட் லாந்தைச் சேர்ந்த பீட்டர் நிகோலே.

இந்தியாவில் எந்த மாநிலத்தில் இது பிரபலம்? சிறந்த ஆட்டக்காரர் யார்?

இப்போது மிகச் சிறப்பாக கருதப்படுபவர் தில்லியைச் சேர்ந்த ரிக்விக் பட்டாசார்யா. மகாராஷ்ட்ராவில் சற்றுப் பேசப்படும் ஆட்டமாக இருக் கிறது. கடந்த காலங்களில் அனில் நாயர், ஆர்.கே.மன்சந்தா, புவனேஸ்வரி குமாரி ஆகியோர் சிறந்த ஆட்டக்காரர் களாக விளங்கினார்கள். இவர்களுக்கு உயர்ந்த பட்ச விருதான அர்ஜுனா விருதும் தரப்பட்டுள்ளது.

இந்த ஆட்டத்தின் வேறு சிறப்பு கள் என்ன?


உலகத்திலேயே ஐஸ் ஹாக்கி என்ற விளையாட்டுக்கு அப்புறம், மிகவும் சுறு சுறுப்பான விளையாட்டாகக் கருதப் படுவது ஸ்குவாஷ் தான். ரொம்பவும் வேகமான விறுவிறுப்பான ஆட்டம் இது. ஸ்குவாஷ் ஆட்டக்காரர்கள் பூரண உடல் தகுதியுடன் விளங்க வேண்டும். எதிராளி பந்தைச் சுவரில் அடிக்கும் போது, அது சுவர் அருகிலும் விழலாம். தூரத்திலும் விழலாம். ஓடியாடி அதைத் திருப்பி, அனுப்ப வேண்டும். ஆட்டத்தைப் பார்த்தால்தான் 'என்ன வேகம்' என்று பிரமித்துப் போவீர்கள்.


இதுவரை நடந்த போட்டிகளில் மிகவும் த்ரில்லிங்கான போட்டி எது?

மிக வேகமான விளையாட்டு ஆதலால் எல்லா போட்டிகளும் த்ரில் லாகவே இருக்கும். 1980ம் ஆண்டு ஆர்.கே.மன்சந்தாவுக்கும், அனில் நாயருக்கும் நடந்த தேசிய இறுதிப் போட்டி, இந்தியாவைப் பொறுத்த மட்டில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. 90 நிமிடம் நடந்த இந்தப் போட்டியில் இறுதியில் வென்று தேசிய சாம்பிய னாக வந்தவர் மன்சந்தா.

- ப்ரியன்

படங்கள் : **ராஜன்**





ஒவ்வொன்றும் ரூ. 500 மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!


பள்ளி மாணவர்களுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் போட்டி வைத்து, கைக்கடிகாரங்களை வழங்கி வருகிறோம். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். கடைசி தேதி 20.3.2002 உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிட வும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

இந்த மாத போட்டி

இங்கு ஆறு நாடுகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது அந்தந்த நாடுகளின் தலைநகரங்களைக் கண்டுபிடித்து எழுத வேண்டியதுதான்.

1. தாய்லாந்து ________
2. கனடா ________
3. தென் ஆப்பிரிக்கா ________
4. ஆஸ்திரேலியா ________
5. சீனா ________
6. மலேசியா ________


ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097




பணம் எங்கே?

படம் : சேகர்

கதை : சு.செளம்யாயனி, எட்டாம் வகுப்பு, புனித் அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி.




மறுநாள் காலை -
நாகா உனக்கும் சேர்த்துப் பழம் வாங்கு. இந்தா நூறு ரூபாய்.
எங்கே இருந்தது பணம்?
அன்று இரவு -
என்ன மறுபடியும் பணத்தைக் காணோமே, எப்படி?
மறுநாள் -
நாகா, என் வேலை முடிந்தது. கிளம்பறேன்.
என்னை மன்னிச்சிடுங்க. நான் உங்க பணத்தைத் திருடத்தான் வந்தேன். பகலில் இருந்த பணம் இரவில் எங்கே போனது?
பகலில் உன் பார்வை படும்படி பணத்தை வைத்திருந்தேன். இரவில் என் பெட்டியில் வைக்காமல் உன் பெட்டியில் வைத்திருந்தேன். நீ என் பெட்டி, சட்டையை மட்டும் பார்த்தே. இனியாவது திருடாதே.
உங்கள் பெருந்தன்மைக்கு நன்றி. இனி திருட மாட்டேன். வரேன்.

டென்னிஸ் சாம்பியன்கள்!

டென்னிஸ்



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை தாமஸ் ஜோகன்சன் வென்றார். ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த 26 வயதான ஜோகன்சனுக்கு இது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பட்டத்தை ஸ்வீடன் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் முன்னிலை வீரர்களான ஹுவிட், சாம்ப்ராஸ் உள்ளிட்டவர்கள் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து விட்டனர்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பெண்கள் சாம்பியன் பட்டத்தை அமெரிக்காவின் ஜெனிஃபர் காப்ரியாட்டி தக்க வைத்துக் கொண்டுள்ளார். இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனையான ஸ்விட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸைத் தோற்கடித்து பட்டத்தை வென்றுள்ளார். கடந்த ஆண்டில் 2 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற காப்ரியாட்டிக்கு இந்த ஆண்டின் முதல் பட்டம் இது.

மார்ட்டினா ஹிங்கிஸ் ஒற்றையர் பட்டத்தைக் கோட்டைவிட்டாலும் மகளிர் இரட்டையர் பட்டத்தை வென்றுள்ளார். ரஷ்யாவின் அன்னாகூர்னி கோவாவுடன் சேர்ந்து இந்தப் பட்டத்தை வென்றுள்ளார் ஹிங்கிஸ்.

கிரிக்கெட்

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கிடையேயான 6 ஒரு தினப் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இரு அணிகளும் தலா 3 போட்டியில் வென்று சமன் செய்து கொண்டன. கான்பூரில் நடைபெற்ற நான்காவது போட்டியில் 39 ஓவருக்கு 218 ரன்களை எடுத்தது இங்கிலாந்து. இரண்டாவதாகக் களமிறங்கிய இந்திய அணியின் துவக்க ஆட்டக்காரர்களான டெண்டுல்கரும், வீரேந்தர் சேவக்கும் களமிறங்கினர். இருவரும் அபாரமாக விளையாடினர். இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் 29.4 ஓவர்களிலேயே வெற்றி பெற வழி வகுத்தனர். 82 ரன்களில் ஆட்டம் இழந்த சேவக் ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார். 87 ரன்கள் குவித்த டெண்டுல்கர் ஒருதினப் போட்டிகளில் 11,000 ரன்களை அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து கேப்டன் நாஸர் ஹுஸைன் பிறந்து, வளர்ந்து, கிரிக்கெட் பயிற்சி செய்தது எல்லாம் சென்னையில் தான். பிறகு இங்கிலாந்துக்குச் சென்று தம் திறமையால் கேப்டனாகி விட்டார். உங்களுக்காக ஹுஸைன் போஸ்டர் 40ஆம் பக்கத்தில்.

நாணயம் என்ன ஆகும்?



நாணயத்தைக் கையால் தொடாமல் டம்ளருக்குள் விழ வைக்க முடியுமா? .

எப்படி செய்வது?

1. கண்ணாடி டம்ளர் மேல் அஞ்சல் அட்டையை எடுத்து வைக்கவும்.
2. அஞ்சல் அட்டையின் நடுவில் 50 பைசா நாணயத்தை வைக்கவும்.
3. ஆள்காட்டி விரலால் வேகமாக அஞ்சல் அட்டையைச் சுண்டி விடுங்கள். அஞ்சல் அட்டை பறந்து போகும். ஆனால் நாணயம் என்ன ஆகும்?


நாணயம் டம்ளருக்குள் விழுந்து விடும்.

பாட்டில் – நாணயம்

வாய் குறுகலான பாட்டில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் மேல் நீளவாக்கில் உள்ள சிறிய காகிதத்தை வைத்து விடுங்கள். காகிதத்தின் மேல் நாணயத்தை வைக்கவும். இப்பொழுது வேகமாகக் காகிதத்தை இழுத்து விடுங்கள். காகிதம் கையில்வர, நாணயம் பாட்டிலுக்குள் விழுந்து விடுகிறதல்லவா?


காரணம் என்ன?

அட்டையைச் சுண்டும் போது நாணயமும் கீழே விழும் என்றுதான் நினைப்போம். மாறாக நாணயம் டம்ளருக்குள் விழுவது ஏன்? நாம் சுண்டும் விசை அட்டையை மட்டுமே செயல்படுத்துகிறது. விசை நாணயத்தின் மீது செயல்படவில்லை. எனவே விசையால் உந்தப்பட்ட காகிதம் பறக்கிறது. நாணயம் கீழே அதாவது டம்ளருக்குள் விழுந்து விடுகிறது.



Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்.




விடை: 1. ஒட்டகத்தின் வால் 2. கால் குளம்பு 3. தொப்பி 4. ஸ்ட்ரா 5. சூரியனின் கதிர்கள்

வண்ணத்துப் பூச்சியை வனஜா அருகில் சென்று ரசிக்க வழிகாட்டுங்கள்!



எத்தனை கத்திரிகள் உள்ளன?



விடை : பத்து

"நான் எழுதின கதையை நீ படிச்சியா?"

"என்னால ஜீரணிக்கவே முடியலை!"

"நான் உன்னைப் படிக்கத்தானே சொன்னேன். சாப்பிடச் சொல்லலையே!"

— ஆர். அம்பிகா



Registere' h the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

